Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி சித்திரை • 1958 ஏப்ரல் | இதழ் 4

## மயிலைகிழார் மறைவு

(ஆசிரியர்)

நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு 36 ஆண்டுக்கு மேலாகத் தொடர்புகொண்டு, செயலாளர் பத்திராசிரியர் தலைவர் என்னும் பல நிலைகளில் தொண்டாற்றிச் சமாஜத்தை உயிரினும் ஓம்பி வளர்த்து வந்த சைவப் பெரியார், மயிலைகிழார் திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L. அவர்கள், 14-3-58 வெள்ளிக்கிழமை யன்று இரவு நம்மெல்லோரையும் சமாஜத்தையும் வருந்த விட்டுப் பிரிந்து மறைந்து, சிவபிரான் திருவடி நீழலிற் சேர்ந்து விட்டார்கள்.

அவர்களின் மறைவு இத்துணை விரைவில் துடுமென நேரக்கூடும் என எவரும் எதிர்பார்க்கவேயில்லை. சமாஜத்தின் 52 - ஆம் ஆண்டு விழாவிற்கு அணிமையில் தான் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். சமாஜச் செயற்குழுவினரிடம் " சிவஞான சித்தியார் அறுவர் உரை " முதலியனவற்றைப் பதிப்பிடுதல் வேண்டும் என்று மிகுந்த உள்ளக்கிளர்ச்சியுடன் கூறிவந்தார்கள். "தாங்கள் படித்துச் சுவைத்து மகிழ்ந்த ஆங்கில அறிவியல் நூல்களைக் குறித்தும், சமாஜ வாயிலாகப் பழகித் தொடர்புகொண்டிருந்த பழம் பெரும் புலவர்களைக் குறித்தும் தொடர் கட்டுரைகள் பலவற்றைச் " சித்தாந்தம் " இதழில் எழுதி

யுதவுங்கள். என்னோரனைய இளைஞர்கள் பலர்க்கும் அவை பெரிதும் நலம் பயக்கும்" என யான் நேரிலும் கடித வாயிலாகவும் வேண்டிக்கொண்டதற்குத் தம் உடல்நிலை ஓரளவு நலம் பெற்றதும் அங்ஙனமே செய்வதாக மகிழ்ச்சி யுடன் உடன்பட்டிருந்தார்கள். 16-3-58 அன்று அவர் களின் இல்லத்திலேயே சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழ இருந்தது. சமாஜ வளர்ச்சிக்கான பல ஆக்கப் பணிகள் பற்றிய திட்டங்களை அன்று அவர்கள் வகுப்பார்கள் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அந்தோ! நம் எண்ணங் களெல்லாம் பாழாயின! அன்று நிகழ இருந்த செயற்குழுக் கூட்டம் இரங்கற்கூட்டமாக மாற நேரும் என யாரும் எதிர்பார்த்திலர். "மா. பா" என்பதனை "அம்மா—அப்பா" என்னும் சொற்களின் சுருக்கமாகக் கொண்டு, சமாஜத் திற்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அதனைப் போற்றி வளர்த்து வந்த மயிலைகிழார் அவர்களின் மாண் பினைச் சமாஜ அன்பர்கள் பலரும் பாராட்டி வந்தனர். அத்தகைய தாயையும் தந்தையையும் இழந்து வருந்தும் தனிக்குழவியாக இன்று சமாஜம் ஏங்கி நிற்கின்றது.

மாணிக்கவாசகர் சிவபெருமானை "இருந்துதி என் வயிற்கொண்டவன்" எனக் குறிப்பிடுகின்றார். மயிலை கிழார் அவர்களை யானும் அங்ஙனமே நினைப்பது வழக்கம். மயிலைகிழாரின் மாண்புகள் பலவற்றுள் என்னைப் பெரிதும் கவர்ந்தது, அவர்தம் சிறந்த ஆங்கிலப் புலமையேயாகும். மறைமலை அடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை என்னும் இரு பேரறிஞர்களுக்குப் பின்னர், மேலைநாட்டு அறிவியற் கருத்துக்களைச் சைவ சித்தாந்த நுட்பங்களோடு இணைத்துப் பொருத்திக் காட்டி விளக்குதலில், மயிலைகிழார் சிறந்து விளங்கி வந்தார்.

1. Dr. A. N. Whitehead—Religion in the Making.

2. John Baillie—The Roots of Religion in the Human Soul.

3. Rev. A. E. Backer—Christianity and Science in the Twentieth Century.

4. Prof. A. S. Eddington—Science, Religion and Reality.

5. Edmund Noble—Purposive Evolution.

6. Dr. Norman Campbell—What is Science.

7. E. W. Hobson—The Domain of Natural Science.

8. W. C. Dampier Whetham—A History of Science and its Relations with Philosophy and Religion.

9. Standing—Spirit in Evolution from Amoeba to Saint.

10. Dr. Berman-Glands regulating Personality.

11. Mac Dougall—Introduction to Social Psychology.

12. Dr. Lothrop Stoddard-Scientific Humanism.

13. William James-The Varieties of Religious Experience.

14. W. K. Wright—Students' Philosophy of Religion.

15. Alexis Carrel—Man, the Unknown.

என்பனபோன்ற பலப்பல சில சிறந்த ஆங்கில நூல்களின் கருத்துக்களை மயிலைகிழார் அவர்கள் அவ்வப்போது குறிப்பிட்டுப் பேசுவார்கள். அறிவறியாப் பருவத்தில் என்னோரனைய இளைஞர்களுக்கு அவ்விளக்கங்களை அறிந்து பயன் கொள்ள முடியவில்லை. அறிவு சிறிது தொடங்கியுள்ள இந்நிலையிலோ அவர்களைப் போன்றார் இல்லை! என் செய்வது? இனி, இத்துறைகளில் எம்மனோரை ஊக்குவித்து வழிகாட்டி நலஞ் செய்வார் யார் உளர்?

சென்ற மாதச் சித்தாந்தம் இதழில் பராக்கிரம பாண்டியனின் " இறுதி வேண்டுகோள் " குறித்து எழுதியிருந்தமை, ஒருவகையில் மயிலைகிழார் அவர்களின் இறுதி வேண்டுகோள் போலவும் எங்ஙனமோ அமைந்துவிடுவதாயிற்று. பராக்கிரம பாண்டியனைப் போலவே, நமது சைவப்

பெரியார் மயிலைகிழார் அவர்களும் " சமாஜம் " என்னும் பெருங்கோயிலை இனிது காத்து வளர்க்கும் பொறுப்பினை நம்மிடையே ஒப்படைத்துச் சென்றுள்ளார். சமாஜ அன்பர்களாகிய நாம் அனைவரும் சேர்ந்து, அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சமாஜத்தை மேலும் போற்றிக் காத்து வளர்த்துச் சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றி உய்வோமாக !

நம்மருமை மா.பா.தான் நாமெல்லாம் ஏங்கிநிற்க
அம்மையப்பர் தாளை அடைந்துயர்ந்தார் !—செம்மைமிக
நன்றே சமாஜநலன் நாம்காத்துப் போற்றிநிற்றல்
ஒன்றே, அவர்க்காம் உவப்பு !

---

# மயிலை கிழார் இளமுருகனார்*

**தி. கி. நாராயணசாமி நாயுடு**

ம. பா. திருமயிலையில் 8—3—1896 (மன்மத, மாசி பூராடம்) ஞாயிற்றுக்கிழமை கடகராசியில் பிறந்த தனி மகனார். தந்தை மாசிலாமணி முதலியார். தாயார் அன்னம்மையார். இவர்கள் குலதெய்வம் திருப்போரூர் முருகன். இளமையில் இவரை வீட்டில் 'ஞானக் கண்' என்றே அழைப்பர்.

1900—1905 வரை பெங்களூர், நீலகிரியில் தொடக்கப் பள்ளிகளில் பயின்றார். 1906—1911 வரை சென்னை, மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தார். நான்காம் படிவ முதல் வடமொழி பயின்றார். இறுதி நிலைத் தேர்வில் அதிகமார்க் பெற்றவராகத் தேறினார். 1911-1915 வரை சென்னை மாகாணக் கல்லூரி மாணவரானார். இடைநிலை வகுப்பில் கணிதம், பௌதிகம், ரசாயனம் கற்றார். அங்கு டாக்டர். உ. வே. சா. அய்யர் இவரது தமிழாசிரியர். பி. ஏ. வகுப்பில் கணிதம், பௌதிகம் எடுத்து முதலிடம் பெற்று, முதல் வகுப்பில் தேறினார். சென்னை சட்டக் கல்லூரியில் 1915—1917 வரை கற்றார். பி. எல்.

---

*அவரின் தன் வரலாற்றை 'சித்தாந்தம்' மலர் 29, பக்கம் 82-ல் பார்க்க.

தேர்வில் முதல் வகுப்பில் இரண்டாமிடம் பெற்றார். " பார்ப்பனர் சூழ்ச்சியில் முதலிடமும், இந்துலா மெடலும் பார்ப்பன மாணவர்களுக்குச் சென்றதைத் தக்கார் மூலம்" அறிந்தார். அல்லாடி அய்யரிடம் (1917—1919) சட்டப் பயிற்சி பெற்றார். 12-8-1918 முதல் 1930 வரை வழக்கறி ஞராக இருந்தார். 1930-ல் சென்னை சட்டசபை அங்கத் தினரானார். அடுத்து நடந்த தேர்தலில் நின்று தோல்வி யுற்றார். சென்னை மகாஜன சபையார் உப்பு சத்தியாக்கிர கத்தில் நிகழ்ந்த அட்டூழியத்தைத் தீரக் கேட்டு, அறிக்கை தர அமைத்த குழுவில் இவரும் ஒருவர்.

மயிலைகிழாரின் மூத்த அம்மான் இராஜகோபால முதலியார். அவரின் மனைவி ருக்மணி அம்மையாருடன் பிறந்தவர்கள், மணலி - சரவண முதலியார், கிருஷ்ணசாமி முதலியார். மா. பா. வின் தாயாருடன் பிறந்த இளைய தங்கை இரத்தினம்மையார், மணலி - கிருஷ்ணசாமி முதலி யாரின் மனைவி. காலஞ் சென்ற சீனிவாச முதலியார் மகனை இப்போதுள்ள மணலி-இராமகிருஷ்ண முதலியார், அவரின் பேரன். பெரியவரான மணலி-சரவண முதலியார் முதல் மகள், இராஜகோபால் முதலியார் மகன் - ஏகாம்ப ரத்தின் வாழ்க்கைத் துணைவியார். ஏகாம்பரம் மணமான அடுத்த ஆண்டில் இறந்தார். அடுத்த மகள் பார்வதி (சுலோசனை) ம. பா.வினைத் திருப்பதியில் 25-4-1926-ல் மணந்தார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1921-ல் நடந்த சமாஜ ஆண்டு நிறைவு விழாவில் ம. பா. சமாஜச் செயலாள ரானார். அப்போது சமாஜம் பொருள் வலிவற்று நின்ற நிலை. நடந்த 'சித்தாந்தம்' நின்றுவிட்ட நிலை. ஆண்டு நிறைவு விழா மட்டும் நடத்தி உயிர்போகும் நிலையிலிருந்த சமாஜத்திற்குப் புத்துயிர் அளித்து அதை வீறுபெற்று எழச் செய்தார். அடக்கவிலைப் பதிப்புக்களாகத் திருமுறைகள், சாத்திரங்கள், திருப்புகழ், சங்க இலக்கியம், சீவகசிந்தாமணி முதலிய நூல்களைப் பலர் உதவியுடன் பல்லாயிரக்கணக்கில் வெளியிட அல்லும், பகலும் இடைவிடாது உழைத்தார். 'சித்தாந்தம்' மீண்டும் வெளிவந்தது. குப்புசாமி முதலியார் போக்கு பிடிக்காமல் விலகியிருந்த திரு. வி. சகோதரர்களை யும், ச. ச. பிள்ளையையும் மீண்டும் சமாஜத்தில் ஈடுபடச்

செய்தார். 22 ஆண்டுகள் செயலாளராகவும், 12 ஆண்டுகள் 'சித்தாந்த'த்தின் ஆசிரியராகவும் பணியாற்றினர். பள்ளத்தூர் (1944), யாழ்ப்பாணம் (1948), மயிலாப்பூர் (1957) சமாஜ ஆண்டு நிறைவு விழாக்களில் தலைமை வகித்தார். அவர் சமாஜத்திற்குச் செய்த சேவை காரணமாக, அன்பர்களிடம் அவர் வன்மையாக நடந்த காலத்தும், பொறுத்துப் புணியாற்றினர். அவரது தலைமை உரைகளும், சித்தாந்தத்தில் அவர்கள் எழுதிய கட்டுரைகளும் சைவ சமயத்திற்குப் புதிய விளக்கம் தந்தன. அவற்றில் குறிக்கத் தகுந்தவை வருமாறு :—

அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்தல் *27/161.
அறிவியல் அழகியல் அன்பியல் 5/241.
ஆடும் பரிவேல் அணிசேவல் 3/209.
எறிபத்தர் ஆண்மைத் தொண்டு 28/97.
என் செய்வான் தோன்றினேன்? (தம் வரலாறு) 29/82.
கடவுளைக் காட்டும் கண்ணாடி 16/68.
கள்வீரே உமகாதலே 8/113.
கா கா கா 5/65.
காரி நாயனர் வரலாறு 30/84.
கொற்று அட்டி ஆளார் 12/453.
கோகழி 17/65.
சடையன் விடையன் 6/265.
சமய வளர்ச்சி 2/53.
சமய உணர்ச்சி வரலாறு 1/59.
சிவஞான போதம் தமிழ்முதல் நூல் 22/169.
சிறுத்தொண்டர் 4/121.
சைவ சித்தாந்தமும் மேல்நாட்டு அறிவியல் நூல்களும் 1/14.
ஞாயிறு போற்றுதும் 5/1.
தக்ஷிணாமூர்த்தி 12/518.
தாயுமானவர் 27/305.

*மலர் 27. பக்கம் 161.

தாழ்வெனுந் தன்மை 2/22.
திருக்கோகர்ணம் 5/33.
திருக்காரிகரை 17/17.
திருநாளைப்போவார் 5/217.
திருஆலங்காட்டின் சிறப்பு 27/337.
திருமூலர் 28/321.
திருவெம்பாவை 28/385.
திருமுறைகண்ட திருமுறை நம்பி 28/161.
திருவிழாவின் உட்கருத்து 4/97, 27/129.
திருவெம்பாவை ஓதும் காலம் 7/353.
திருநீலகண்ட நாயனுர் சரித்திர நுட்பம் 9/168.
தில்லைத் திருக்கூத்தன் 4/289.
தினசரி வாழ்வில் பௌதிக அறிவு 5/145.
தில்லைக்கூத்தன் தொல்லை மாண்பு 28/225.
தும்மல் 10/394.
தென்புலத்தார் 4/95.
தேடிக்காணும் அநுபவம் 9/136.
நாயன்மார் தொகை 7/193.
நான் நம்புவன சில 14/193.
நால்வர் திருவாக்கும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களும் 28/193.
பச்சை மண்ணும், சுட்ட மண்ணும் 12/177.
பரமன் திருமணப் பங்குனி உத்திரம் 27/97.
பாலருவாயர் பண்புகள் 6/81.
பொய்யடிமை இல்லாத புலவர் யார் ? 7/225.
பூம்பாவைத் திருப்பதிகம் 27/257.
மார்கழி நீராடல் 27/401.
மாசிக் கடலாட்டு 5/41.
மெய்கண்டாரும், பொய்கண்டாரும் 28/353.
வழிபாடு 21/211.
வளராச் சமயங்களிற் பத்துக் குற்றங்கள் 6/57.

விநாயகப் பிரபாவம் 27/225, 30/185.

ஸ்ரீசைலம் (திருப்பருப்பதம்) 16/50, 5/97.

பத்து ஆண்டுகள் கோவூர் சுந்தரேஸ்வரர் கோவிலுக்கும், ஐந்து ஆண்டுகள் திருவிடவெந்தை நித்திய கல்யாணப் பெருமாள் ஆலயத்திற்கும் அறங் காவலராக இருந்தார். வைணவ நூல்களான பகவத்விஷயம், பெரிய வாச்சான்பிள்ளை பேருரை, ஸ்ரீவசன பூஷணம், ஆசார்ய இருதயம், அஷ்டாதச ரஹஸ்யம் பிற கற்றார். 'மயிலை மாதவ தாசன்' என்ற புனைபெயரில் நாலாயிரம் இருமுறையும், பழைய விரிவுரைகளுடன் திருப்பாவை ஒரு முறையும் அடக்கவிலைக்கு அச்சிட்டார். இந்தியா அனைத்தும் யாத்திரை செய்தார். உடலோம்பலில் கண்ணும் கருத்துமாக இருந்தார். உணவு முறையைப் பெரிதும் கவனித்தார். கோடையில் பெங்களூர், நீலகிரி போகத் தவறார். காசிப் பல்கலைக் கழகத்தில் 1950-ல் நிகழ்த்திய திருப்பனந்தாள் சைவ சித்தாந்த ஆங்கிலச் சொற்பொழிவுகளும், கலைக் களஞ்சியத்தில் வந்த 'சிவன், சைவம்' என்ற அவரது கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை. சமாஜத்தில் மும்முறை திருமுறைகளை அச்சிட்ட அநுபவத்தைக்கொண்டு இவர் அடங்கன் முறையை 1953-ல் சொந்தப் பதிப்பாக அடக்க விலையில் வெளியிட்டார். அதில் அவர் எழுதிய முகவுரையும், அரும்பொருள் அகராதியும், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 72-ம் ஆண்டுத் தலைமையுரையும் சைவக் களஞ்சியமாகும். அவரது மணிவிழா அவர் இல்லத்தில் 7-3-56-ல் நிகழ்ந்தது. 25-3-56-ல் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் கூடிய தனிக் கூட்டத்தில் சமாஜம் அவரைச் சிறப்பித்தது.

இப்படிப் புகழுடன் தோன்றிய இவர் சமாஜத் தலைவராக 14-3-58 இரவு 11-30 மணிக்கு இருதய நோயால் திடீரென இறைவன் திருவடி நீழல் எய்தினர். அவரைப் பற்றித் திரு. வி. க. வின்* வாழ்க்கைக் குறிப்பிலுள்ள குறிப்பைக் கூறிமுடிப்பாம்.

" கருவில் திருவுடையார் என்பது புலவர் மொழி. அம்மொழிக்கு இலக்கியர் ம. பா.! அவர் வாழ்க்கையில் பல

*இதன் அணிந்துரையை ம. பா. எழுதியுள்ளார்.

நலங்கள் வாய்க்கப்பெற்றவர். அவர்க்குக் கல்விச் செல்வம் உண்டு; பொருட் செல்வம் உண்டு; சொற் செல்வம் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, 'செல்வன் கழலேத்தும் செல்வம்' அவரிடம் பொருந்தியுள்ளது. கருத்து வேற்றுமைகளை உளங்கொள்ளாது சிக்கல்களையும் அருஞ் செயல்களையும் தள்ளி முடிக்கும் வல்லமை முதலியாரிடத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அவருக்கும் எனக்கும் சிற்சில துறைகளில் கருத்து வேற்றுமை உண்டு. அது காரணமாக நாங்கள் பிணங்கிப் பூசல் விளைத்துக் கொள்வதில்லை. பிணக்கு நேரினும் அது நீர்கிழிய எய்த வடுப் போல மாறிவிடும்."

---

# தனிப்பட்ட மகனர்

**இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.**

மயிலை கிழார் இளமுருகனர் அவர்களை முதல் முதலாக ஒரு கோடைக்கால விடுமுறையில் கோடைக்கானலில் அறிந்தேன். பிறகு 1932-ல் சாத்தூரில் என் தலைமையில் "கொக்கரக்கோ" என்ற பொருள்பற்றி நகைச் சுவை ததும்பப் பேசினர். மீண்டும் ஒரு முறை 'அழு, இழு, உழு, எழு, ஒழு' என்ற பொருள்பற்றிப் பேசினர். இத்தலைப்புக்களே அவருடைய மனப்போக்கை ஒருவாறு புலப்படுத்தும். அதன் பிறகு நாளது வரை கணக்கற்ற கூட்டங்களில் கணக்கற்ற தலைப்புக்களில் அவர் பேசியிருக்கிருர். அவரோடு தொலைவிலிருந்து பழகியும் அணுகி நெருங்கிப் பழகியும் இருந்திருக்கிறேன். என்ருலும் அவருடைய உண்மையான குணங்களை முற்றும் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவ்வாறே மற்றவர்களும் கண்டு கொண்டதாக என்னிடம் கூறியிருக்கின்ருர்கள். ஆகவே அவரை ஒரு தனிப்பட்ட மனிதராக நான் கருதுகிறேன்.

'வெகுளி கணமேனும் காத்தல் அரிது' என்று கூறும் படியாக, ஒவ்வொரு தடவை துர்வாச முனிவராகத் தோற்றம் அளிப்பார். மற்ருெரு முறை வள்ளுவனர் போன்ற சாந்த உருவத்தில் காட்சி அளிப்பார். நிரம்பப் படித்தவர் ஆக இருந்தும், போதிய சொத்தும் வருவாயும் படைத்தவ

ராக இருந்தும், அவருடைய இல்வாழ்க்கை பல தொல்லைகளில் ஈடுபட்டு ஒரு அவல வாழ்க்கையாக இருந்தது. அதுவே அவருடைய குணத்தையும் முரண் உள்ளதாகச் செய்தது என்று எண்ணினேன். அவலத்தை விட்டொழிக்கவே அவர் சித்தாந்த ஆராய்ச்சியிலும் சைவ சேவையிலும் ஈடுபட்டார் என்றும் நினைக்கவேண்டியிருந்தது. கோடைக் காலங்களில் தவருது மலைவாசம் செய்வார் அல்லது பெங்களூர் செல்வார். எவ்வாற்ருனும் அவர் தமது குடும்பத் தொல்லைகளை விட்டொழிக்க முடியவில்லை என்றும் நினைக்கிறேன். அதுவே அவரை மறுமைக்கு விரைவில் கொண்டேகியது எனவும் கூறலாம்.

சைவ நூல்களையும் மற்ற சமய நூல்களையும் வெகு நன்ருகவும் ஆழமாகவும் படித்திருக்கின்ருர். அதைத் தானும் உணர்ந்து அகமகிழ்வார். அம்மகிழ்ச்சியின் விளைவாகப் பிறர் அறிவு தாழ்ந்ததென்றும் நினைப்பார். சில தடவைகளில் வெளியிடவும் செய்வார். இக்குணம் சமயநூல் உரையாசிரியர்கள் பலரிடமும் இருந்தது. இக் குணம் இவரிடம் நான் எதிர்பார்க்கவில்லை. அதைக் கண்டவுடன் இது படித்தவர்களிடம் காணும் ஒரு இயல்பு என்றும், இந்தியரிடம் மிகவும் உண்டு என்றும் எண்ணிக் குறை கூறுவதை விட்டுவிட்டேன்.

தன் சேவைகளில் ஒன்ருகவும் பெரிதாகவும் இழைத்தது சமாசச் சேவை. அதனை மேற்கொண்டதும் பொன்னே போலக் காத்துவந்தார். ‘சமாசம் இவரே, இவர்தான் சமாசமே’ என்று சொல்லும் மட்டும் உழைத்தார். இது உண்மை. இதை உணர்ந்து பிறருக்குச் சமாசத்தில் ஈடுபடுவதற்கு இடம் கொடாதிருந்தார். நாளாவட்டத்தில் சமாசம் முன்னேறவும் விடார். இந்த முறையில் இவரது குறுகிய மணப்பான்மை சமாசத்தின் பணிகளைக் குறுக்கிவிட்டது. சமாசமும் ஒரு குறுகிய நிலையை அடைந்தது.

சித்தாந்தப் பத்திரிகை, சமாச ஆண்டுவிழாக்கள், சமாசத் திங்கள் விழாக்கள், இலவசப் பதிப்புக்கள், சமயச் சொற்பொழிவுகள், கோடைக்காலச் சித்தாந்த வகுப்புக்கள், சமயக் கட்டுரைகள், மாணவர் தேர்தல்கள், சைவப் பரிசுகள் முதலியவைகள் இவர் செய்த பணிகளுள் சில. அவைகளிற் பிறர் மதிக்கும்படியும், பொருமை கொள்ளவும்

மிக ஆர்வத்தோடு பாடுபட்டார். ஏனைய தமிழ்மக்களை இக் கைங்கரியங்களில் ஈடுபடுத்திப் பழக்கி வைத்துச் சமாசச் சேவையைப் பெருக்கிவைக்க முயன்றார் இல்லை. அவ்வாறு முயலவும் வழிதந்தாரில்லை. இதைக் காணும்போது சமாசத் தொண்டர்களும் மனம் நொந்துவிட்டு அகன்று செல்லவும் நேரிட்டது. இருந்தாலும் சைவத்திற்கு இவர் செய்த தொண்டுபோலத் தமிழ் நாட்டில் பிறர் செய்திருக்கமாட்டார் என்பது திண்ணம். தம் வாழ்க்கையையே சைவத்திற்கு அர்ப்பணம் செய்து சென்றார்.

சிக்கனம் என்ற குணத்திற்கு அவர் ஒரு எடுத்துக் காட்டு. ஏழைகள் மட்டும் அல்ல, பணக்காரர்களும் சிக்கன முறை பாராட்டுதல் நல்லது. அம்முறையை அதிகப் படியாக அவர் பயன்படுத்திக்கொண்டதில் அதனால் இன்பம் அடைந்தாரோ என்பது எனக்கு ஐயம். தன் குடும்ப நடவடிக்கைகளில் மட்டும் அல்ல, சமாசச் செயல்களிலும் சமயப் பொதுச் சேவைகளிலும் சிக்கனத்தைக் காட்டுவார். இந்த முறைகளில் அவர் காட்டிய நேர்மை மெச்சத்தக்கதே. எந்தக் கூட்டத்திற்கோ யாத்திரைக்கோ சென்றாலும் வேலைமுடிந்ததும் ஒரு கணமேனும் தங்கமாட்டார். பிறரை எதிர்பார்க்கவோ அழைத்துச் செல்லவோ முயலமாட்டார். அவ்வாறு தாமதித்தால் சிக்கனமுறைக்குத் தகாது என்று எண்ணுவார்போலும். அறிமுகம் இல்லாத ஆந்திர நாட்டில் ஒரு முறை யாத்திரை சென்றபோது இரவில் ஒரு ஊர் சென்றவுடனே கூடச் சென்றவர்களை ஒரு சொல்கூடக் கேட்காமல் தானாகவே செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றுவிட்டார். மற்ற பலர்கள் ' திண்டாடித் தெருவில் அலைந்தார்கள் ; பின்னர்க் கேட்ட காலத்தில் அவரவர் பாடு அவரவர்களுக்கு ' என்று சொல்லி வாளாவிருந்தார்.

சைவத்தில் பெரும்பற்றுக் கொண்டபோதிலும் மற்ற சமயங்களில் வெறுப்புக் கொள்ளார், ஈடுபடவும் செய்வார். இல்லத்தில் வழிபாடு, கோயில்களில் வழிபாடு, திருவிழாக்களில் தரிசனம், முறையாகப் பெருங்கோயில்களுக்குச் செல்லுகை, முதலிய முறைகளில் தவறமாட்டார். அகவழிபாட்டோடு புறவழிபாட்டையும் மதிப்பார். வழிச்செலவு பெறாமல் பேச்சுக்களில் கலந்து கொள்ளமாட்டார். சென்ற இடங்களில் உணவு சுருக்கிக் கொள்ளமாட்டார். ஏனைய

சமய நூல்களையும் இலக்கிய நூல்களையும் வெளியிடுவதில் அக்கரை காட்டினர். ஆகவே சைவத்தில் மட்டும் அல்ல, தமிழிலும் ஆர்வம் கொண்டவர் என்க. ஆங்கிலமும் தமிழும் எழுதுவதில் தெளிவாகவும் உருக்கமாகவும் எழுதுவார். வெளிப்பகட்டுக்கள் அவரிடம் கிடையாது. சில ஆண்டுகள் அறநிலையச் சேவைகளில் ஈடுபட்டு அந்நிலையங்களை நன்கு நடத்தினர். அவைகளில் கோவூர் ஒன்று. ஆலய வரலாறுகளைச் சுருக்கமுறையில் எழுதிப் பொதுமக்களுக்கு உதவியதில் அவர் முதல்வர். சேவா நிலையங்களான மாணவர் விடுதிகள், உணவு விடுதிகள் முதலியவைகளில் ஈடுபட்டிருந்தார். உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் ஆர்வம் உண்டு. கிரிக்கெட்டு பந்தயம் என்றால், 15ரூ கட்டணம் கொடுத்துக் காலை முதல் மாலை வரையிலும் சிரமம் பாராமல் ஊன்றிப் பார்த்துக்கொண்டிருப்பார்.

வாதங்களில் கேடு கெட்டது பிடிவாதம் என்பார்கள். அது இவரிடம் மிகவும் உண்டு என்று பலர் கூறுவார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளேன். இவரிடம் இருப்பது கண்டிப்பு. எதை உண்மை என்றும் சரி என்றும் நம்பினரோ அதனைக் கண்டிப்பாக நடத்திவைப்பார். பிறர் என்ன நினைத்தாலும் சிறிதும் விட்டுக்கொடுக்கார். இது என்ன குணம் என்று நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.

அவரிடம் பழகினவர்கள் அவருடைய நடவடிக்கைகளிலும் கொள்கையிலும் முதலிலிருந்து இறுதிவரையில் ஒரே தன்மையைக் கொண்டார் என்று குறிப்பிடுவார்கள். கருத்துக்களில் யாதொரு மாறுபாடும் கண்டதில்லை என்றும் கூறுவார்கள். நானும் அவ்விதமாகவே நினைத்திருந்தேன். உலகில் எல்லா மக்களிடமும் கொள்கைகள் வேறுபாடு அடைதல் போல் இவரிடமும் அடைந்ததென்று பின்னர்க் கண்டேன். சமாசத்தில் முதன் முதலில் சேர்ந்த பொழுது இவர் வடமொழிக்கு அடிமையாக இருந்தார். தன் பெயரையும் கூட 'ம. பாலசுப்ரஹ்மணியம்' என்று கையெழுத்துச் செய்வார். பிற்காலத்தில் இளமுருகனர் என்று தூயதமிழ்ப் பெயரினல் தம்மைக் குறிப்பிடத் தொடங்கினர். முதலில் சிவஞான முனிவரின் மாணக்கனுக இருந்து சிவஞானபோதம் வடமொழியின் மொழிபெயர்ப்பு என்பதை மறுத்திலர். பிற்காலத்தில் சிவஞான

போதம் தமிழ் முதல் நூலே என்று 120 காரணங்கள் காட்டி ஒரு சிறு நூலும் வெளியிட்டார். ஆகவே ஏனைய அறிஞர்கள் போன்று இவரும் கால முற்போக்கில் கருத்துக்களேயும் மாற்றிக்கொண்டவரே என்று அறிய வேண்டும்.

மேலே கூறிய சில கருத்துக்களிலிருந்து மயிலேகிழார் அவர்களே ஒரு தனிப்பட்ட மகனர் என்று கூறலாம் அல்லவா ?

# இனி நாம் செய்வதென் ?

**ராவ் சாயிப் நல் - முருகேச முதலியார் பி. ஏ.**

எம் சமாஜத் தலேவர் உயர்திரு ம. பாலசுப்பிரமணிய முதலியார் மறைவு சமாஜத்துக்கு மட்டுமன்று, சைவ உலகத்துக்கு மட்டுமன்று, சைவ உலகத்துக்கும் ஆராய்ச்சி யாளர் உலகத்துக்கும் ஒரு பெருத்த நஷ்டத்தை உண்டாக்கி விட்டது. சுமார் முப்பது ஆண்டுகள் இடைவிடாது சமா ஜத்தின் ஆக்க வேலேகளில் ஈடுபட்டு வந்தார். தனிப்பட்ட உழைப்பாலும் முயற்சியாலும் சைவத் திருமுறைகள், சாத் திரங்கள், புராணங்கள் இன்னும் பல நூல்களேயும் நல்ல முறையில் பதிப்பித்து அடக்க விலேக்குப் பல்லாயிரக்கணக் கில் பரவச் செய்தார். அவருடைய கசடற்ற கல்வியும் நுண்மாண் நுழைபுலமும் அவர் எழுதிய ஆராய்ச்சிப் பகுதி களும் உரைக் குறிப்புகளும் வெளியாகியிருக்கின்றன. அவ ருடைய சைவ சித்தாந்தப் பற்றுக்கு அவர் எழுதிய “ சிவ ஞான போதம் தமிழ் முதல் நூலே-120 காரணங்கள் ” என்ற ஒரு நூலே சான்றுகும். அவர் சிறப்பு ஞானத்தால் மட்டுமன்று சீலத்தால் கூட. எந்த நேரத்திலும் கொள்கை களேயும் குறிக்கோள்களேயும் வாய்மையையும் சிறிதேனும் கைவிடார். தோற்றத்தாலும் பேச்சாலும் கடின சித்தம் உடையவர் போன்றிருப்பினும், உள்ளத்தில் கள்ளமற்ற அன்புடையவர். என்பால் பேரன்பும் அபிமானமும் காட் டியவர். இசையோடு வாழ்ந்தார். வசையின்றி வாழ்ந்தார். இத்தகைய உண்மைச் சைவரைக் காண்பது அரிது. இது உண்மையே, புகழ்ச்சியில்லே. வாழ்நாளே வீணுளாக்காமல்

இறைவன் நூலாராய்ச்சியிலே செலவிட்ட இப்பெரியார் அரனடிக்கீழ் இறுமாந்திருக்கும் பேற்றை யடைந்தார் என்பதில் ஐயமில்லை.

" உனதடியவர் புகழ் ஆராய்ந்த நூலினர்
உயர்கதி பெற அருளோங்கு மாமயிலுறை வோனே "

எனவரும் அருணகிரியார் வாக்கு பொய்யாகாது.

இனி நாம் செய்வதென்? என்று சிந்திப்பதே இந்த நேரத்தில் நம் கடமையாகும். சமாஜத்தில் தொடர்பு கொண்ட ஒவ்வொருவரும் அவராற்றிய பணிகளில் சிலவற்றையேனும் மேற்கொண்டு நிறைவேற்றவேண்டும். அது தான் சித்தாந்த மரபு, சைவ பரம்பரை, மெய்ச்சந்தானம் என்றெல்லாம் நாம் போற்றும் மாண்புகளுக்கு அழகு. வாய்க்கோட்டை பயனில்லை. நடைமுறை முயற்சிகள் தேவை. இந்த அருமைச்சமாஜம் அழியத்தகுமோ? அதன் வளர்ச்சிக்குக் கல்வியாளர்கள் கல்வியைத் தரட்டும், பொருளுடையவர்கள் சிறிதளவேனும் பொருளைக் கொடுக்கட்டும். எல்லோரும் உழைப்பைத் தரட்டும். இறைவன் அருள் காட்டுவாராக!

## இனி யார் உளர்?

**வல்லை - பாலசுப்பிரமணியம் B.A.**

தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் சீரிய முறையில் செய்தற்கேற்ற வசதியும் ஓய்வும் மனப்பக்குவமும் செல்வமும் ஆர்வமும் அறிவாற்றல்களும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பெரியார் ஒருவரை இழந்துவிட்டோம். சிவம் பெருக்கும் சீலர்களும் தமிழ் பரப்பும் தகவோர்களும் இஞ்ஞான்று பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுள் ஒருவருக்கேனும் யான் மேலெடுத்துக் காட்டிய வாய்ப்புகள் அனைத்தும் ஒருங்கே வாய்த்தில. இவ்வொரு காரணத்தினாலேயே, ம. பா. அவர்களின் மறைவு தமிழுக்கும் சைவத்துக்கும்—ஏன், வைணவத்துக்குங் கூடத்தான்—இட்டு நிரப்பமுடியாத இழப்பாகும்.

தமது பெயரன் என்பதனாலோ வேறு எக்காரணத்தினாலோ, ம. பா. அவர்கள் என்னோடு எஞ்ஞான்றும்

இதயங் கலந்து உழுவலன்போடு பழகிவந்தார். 'சித்தாந்தம்' ஆசிரியர் என்னும் முறைமையில், பத்திரிகைக்கு வரும் கட்டுரைகளில் காணப்படும் குணங்குறைகளை மிகக்கூர்மை யாக நோக்கும் கண்களை இயல்பாகப் படைத்த நம் முதலி யார், என் கட்டுரையாதல் என் மனைவியாரின் கட்டுரை யாதல் கிடைக்கப்பெற்றால், மறு பேச்சில்லாமல் அச்சகத் துக்கு அனுப்பிவிடுவார். இவ் வகையில் அவர் பிரிவு சொந்த முறையில் எங்கள் குடும்பத்துக்குப் பேர் இழப்பு.

1949-ம் ஆண்டில் மயிலைகிழார் மிக்க நோயுற்று, மரணப் படுக்கையிலிருந்து பிழைத்தார். கூற்றுவன் பாசத்தில் கட்டுண்டு பின்னர் மீண்டார் என்றே சொல்லவேண்டும். அதைக் குறிப்பிட்டு, அண்மையில் ஒருநாள் நான் அவரிடம், "முதலியார் அவர்களே, நம் இறைவர் பெரிய சுயநலக்காரர். காரைக்காலம்மையாரின் வாழ்வைக் கெடுத்து 'அற்புதத் திருவந்தாதி' கொண்டார். அவரே உங்களுக்கு வாழ்வைக் கொடுத்து 'அடங்கன்முறை - இள முருகனார் பதிப்பு' பெற்றார்" என்று கூறினேன். ம. பா. சிரித்துக்கொண்டே, "நிந்தா ஸ்துதியாகக்கூட அப்படியெல் லாம் சொல்லக்கூடாது. ஆயக்கடவேன் நானோதான்? என்னதோ இங்கு அதிகாரம்?..." என்று வாயைப் பொத்தினார்.

அன்பர்களே, பணிவுடைமை கருதி ம. பா. அப்படிச் சொன்ன போதிலும், உண்மை என்னவோ, நான் சொன் னதுதான்.

> " இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன் கண் விடல் "

என்பதை நன்குணர்ந்த சிவபெருமான், அப்பதிப்புக்காக வென்றே ம. பா. அவர்களை வாழவைத்து, காரியம் முடிந்த தும் அவரைத் தம் கழற் கீழ் வைத்துக்கொண்டார் என்று தான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

தம் வரலாற்றுச் சுருக்கத்தில், தமக்குப் புத்திரப்பேறு இன்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது, " நாங்கள் இரு வரும் அதைப்பற்றி என்றும் கவலைப்பட்டதே யில்லை " என்று ம. பா. எழுதுகிறார். முக்காலும் உண்மை. அவர்

என் கவலைப்படவேண்டும்? அவர் தமது எச்சங்களாக நமக்கு விட்டுப்போன ஆராய்ச்சிக் கட்டுரைகளும் உயரிய நூற்பதிப்புக்களும் இனிய பண்புகளின் நினைவுகளும் அவர் தக்கார் என்பதை என்றும் பறை சாற்றுமன்றோ?

" தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் "

என்பது பொய்யாமொழி யல்லவா?

கல்விமான்கள் அமரர்கள். அவர்கள் என்றும் இறப்பதில்லை. அவர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளில் சிரஞ்சீவித்துவம் பெற்று, மரணத்துக்குப் பிறகும் புத்துயிருடன் விளங்குகிறார்கள்.

---

# " ஞானக்கண் " இழந்தோம்

**வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்**

இனி, முகத்தில் 'கண்' இழந்து எங்ஙனம் வாழ்வோம்?

எவ்வளவோ ஆற்றியும், நெஞ்சம் பொறுக்கவில்லை. நமது கல்விக்கடல், சிவக்கடல், தவக்கடல் வறண்டு, அவ்விடத்தில் ஒரு பெரிய பாலைவனம் தோற்றமளிக்கிறது. படுபாவி அந்தக் கூற்றுவன் விறகுக்காக வேண்டி மற்ற மரங்களைப்போல் எண்ணிக் கற்பக மரத்தையும் வெட்டிச் சாய்த்து விட்டான்!

"சில நண்பர்கள் இல்லங்களில் சமையலறைக்குள்ளும் செல்கின்ற உரிமை எனக்குண்டு. பலர் என்னை ' அப்பா, அப்பா' என்றே அழைக்கிறார்கள். இதுவே போதாதோ?... சமாஜத் தொடர்பு கொண்ட சில பெண்மணியைக் கண்டு, சொற்பொழிவு, கட்டுரை முதலியனபற்றித் திட்டம்செய்ய வேண்டிய பொறுப்பு, சமாஜக் காரியதரிசி எனும்முறையில் எனக்கிருந்தது...நான் அவர்களிடம் நேரில் செல்வேன். பல ஆண்டுகளாகப் பழகியபடியால் அவர்களும் தடையின்றிப் பேசுவார்கள்..." என்றிவ்வாறு பல கருத்துக்களை ம. பா. தமது வரலாற்றுச் சுருக்கத்தில் பொறித்திருக்கிறார்கள். இவற்றை அவர் பல பெண்மணிகளைக் கருத்தில் கொண்டு எழுதிய போதிலும், என்னையும் எங்கள் குடும்பத்

தையும் எண்ணியே எழுதினுரென்று நாங்கள் நினைக்கும் அளவுக்கு அவர் எங்களோடு நெருங்கிப்பழகினர். அவற்றை யெல்லாம் எப்படி மறப்பேன்?

வேறு எதற்காக இல்லாவிட்டாலும், தேவார அடங்கன் முறைப் பதிப்புக்காகவும், அதில் 145 பக்கம் கொண்ட அரும்பொருள் அகராதிக்காகவும், 79 பக்கம் கொண்ட தலச்சிறப்பகராதிக்காகவும், தேவாரப் பதிகங் கட்கு ஒரு தொடராக இலக்கங் கொடுத்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநொடித்தான் மலைத்திருப்பதிகத்தின் கடைசிப் பாட்டுக்கு 8250 என இலக்கங்கொடுத்து முடித்ததற்காகவுமே, தமிழர்களும் சைவர்களுமாகிய நாம் ம. பா. அவர்கட்கு எவ்வளவோ கடமைப்பட்டுள்ளோம். அசுர சாதகம், செயற்கரிய செயல் என்றே நான் இவற்றைக் கருதுகிறேன். எல்லையற்ற சிவபக்தியும், பழுத்த தமிழ்ப் புலமையுந்தான் ம. பா. அவர்களுக்குக் கைகொடுத்து, இச் சாதனையை நிறைவேற்றச் செய்தன.

முத்துக்குளிக்கும் தொழிலாளி உயிரையும் பொருட் படுத்தாது மூச்சைப் பிடித்து, ஆழ்கடலில் மூழ்கி, நன்முத் துக்களைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டுவந்தால், பணம் படைத்த நவநாகரிக நங்கையர் அம் முத்துக்களாலான ஆரம் தம் மார்பகத்தில் புரண்டசைய மேனி மினுக்கி, நடை பயில்வார்கள். அங்ஙனமே, ம. பா. அவர்கள் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, தேவாரம் என்னும் தமிழ்க்கடலுள் மூழ்கி, எவருக்கும் கிடைக்காத அரும்பொருள்கள் என்னும் நன்முத்துக்களை எடுத்து, பொன் வள்ளத்தில் சுளைசுளையாக வைத்து,'இதோ இதோ' என்று நமக்கு வழங்குகிறார். அவற்றை நாம் நமது ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். நமது வாசகர் களும் நம்மைக் கேட்பவர்களும் சரக்கு நம்முடையது தானென்று கருதி, நம்மை வானளாவப் புகழ்வார்கள். நன்ருகப் புகழட்டும். ஆனல், நமக்கு இவற்றைப் பிச்சை யாகத் தந்த பெருமகனுடைய பெயரைப் பலர் அறியச் சொல்லாவிட்டாலும், நமது நெஞ்சார அவருக்கு அஞ்சலி செய்தோமானல், அதுவே நாம் ம. பா. அவர்கள் நினைவுக் குச் செய்யும் கைம்மாருகும்.

# இரங்கல் உரைகள்

## 1

சைவப் பெரியார் திரு. "மயிலைகிழார்" அவர்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்கு இல்லாதபோதிலும், 1945-ஆம் ஆண்டில் பழநித் திருப்புகழ் மாநாடு முடிந்தவுடன் பழநியில் இருந்து திண்டுக்கல் வரும் வரையில் ரெயிலில் அவர் உடனிருந்து பேசும் பாக்கியத்தைப் பெற்றேன். சில மணிநேரம் அவருடன் இருந்த அந்நேரத்தில் பலநாள் பிறருடன் பழகி யிருந்தாலும் கிடைப்பதற்கு அரிதான — எனக்கு வேண்டியதான — ஓர் அருமை விஷயத்தை அவர் வாயிலாகக் கேட்டுணர்ந்து மகிழ்ச்சி அடைந்தேன். அவர் எடுத்துக் கூறின அந்த அருமை விஷயத்தை என் வேண்டுகோளின்படி அவர் 29—4—1946 தேதியில் ஒரு கடிதத்தில் எழுதி அனுப்பினர். அதன் சுருக்கம் பின்வருமாறு :—

'மதுரைச் சிவப்பிரகாசர் உமாபதிசிவம் இயற்றிய சிவப்பிரகாசத்துக்கு ஓர் உரை கண்டனர். அவ்வுரையின் சிறப்புப் பாயிரத்தால் அவ்வுரையின் காலம் கி. பி. 1488 என்று ஏற்படுகின்றது. இவ்வுரையில் "விந்துநாத ஓசைக்குத் தூரமானது எனவரும் ஏதுக்களைக் கண்டு கொள்க" என்ற பகுதி "வாசித்துக் காணொணாதது" என்ற திருப்புகழைக் குறிக்கின்றது. திருப்புகழ் பாடப்பெற்ற காலம் 1450-கி. பி. எனப்படுதலால், 38-ஆண்டுகட் குள்ளே சித்தாந்த சாத்திர உரையில் எடுத்துக் காட்டிய பெருமை திருப்புகழுக்கு இருந்தபடியால் திருப்புகழ் எவ்வளவு விரைவில் கற்றோரால் பாராட்டப்பட்டது என்பது புலப்படுகின்றது'

இவ்விஷயத்தை எனக்குத் தெரிவித்த அன்புக்கு என் பெரு நன்றியை அவருக்கு உடனே தெரிவித்தேன். இத்தகைய அரிய பல விஷயங்களைத் தம்முட் கொண்டிருந்த சைவப் பெருநிதிப் பேடகம் அவர்; சைவ நெறி பெற்ற புண்ணியக் கண்களுள் ஒன்று அவர்; அக்கண்ணை இழந்து துயர் உறுகின்றோம். "மாயப் பிறவி உன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி ஆயக் கடவேன் நானோதான்?

என்னதோ இங்கதி காரம்?'' எனவரும் மணிவாசகத்தை நினைந்து ஆறுதல் அடைவோமாக.

(கையறு நிலை)

ஞாலம் உய்ய உருஎடுத்து நலம்சார் சைவம் வளர்ப்பதற்கே
சால உழைத்த தகையாளா ! தமிழா தரித்த சீராளா !
ஆலம் உண்ட பிரானடியை அகத்தே இருத்தி மகிழ்ச்சியுற்ற
பால சுப்ர மணியப்பேர் படைத்த திருவார் பேராளா !

அல்ல உற்ற பிறப்பை அகற்றவே
நல்ல தொண்டு நீநாடி நயந்ததால்
எல்லை யற்ற மகிழ்ச்சியொ டெம்பிரான்
வல்லை வாஎன் றழைத்தனர் உன்னையே.

செந்தமிழ்க்கோர் சிகரமெனத் திகழு கின்ற
சித்தாந்தப் பத்திரிகை சிறப்புற் றோங்க
அந்தநிறை பெருமுயற்சி பலவும் செய்த
அழகைநினைந் துருகுவமோ ? சைவம் ஓங்கச்
செந்தமிழ்க்கட் டுரைகள்பல எழுதி வந்த
சிறப்பைநினைந் துருகுவமோ ? சபையில் நின்று
பைந்தமிழோர் குதூகலிக்கப் பேசும் உன்றன்
பண்பைநினைந் துருகுவமோ ? அறிந்தி லேமால் !

இராவ் பகதூர் - தணிகைமணி
**வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.**

## 2

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களைச் சாது அச்சுக்கூடத்தில் "சித்தாந்தம்" அச்சிடத் தொடங்கிய 1928-ம் ஆண்டு முதல் யான் அறிவேன். அப்போது யான் அச்சுக் கோக்கும் தொழில் புரிந்து வந்தேன். அவர், தம் தந்தையார் ஆணைப்படி வெள்ளிக்கிழமைதோறும் மயிலைக் கபாலீச்சுரம் சென்று வழிபடும் நியமம் உடையவர். அவர் கபாலீச்சுரம் சென்று மீளும்போது சாது அச்சுக் கூடம் நண்ணி, திரு. வி. உலகநாத முதலியார் அவர்களிடம் அச்சு வேலை சம்பந்தமாகவும், தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களிடம் சமயம்–அரசியல் முதலியன பற்றியும் உரையாடிச் செல்லும் இயல்பினர். யான் 1932-ம் ஆண்டு முதல்

அச்சக மேற்பார்வையாளனாகவும், 1945-ம் ஆண்டு முதல் அச்சகப் பொறுப்பாளனாகவும் பணியாற்றியபோதும், சமாஜ நிர்வாகக் குழுவினருள் அங்கம் பெற்றுத் தொண்டாற்றியபோதும், திரு முதலியாருடன் நேரே கலந்து பழகும் பேறு பெற்றேன். நூல்கள் வெளியிடுவதிலும், சமாஜ அலுவல்களிலும் தாம் கொண்ட கருத்துக்கு மாறாக யார் என்ன சொல்லினும் கொள்ளாது தாம் மேற்கொண்ட கடமையைச் செம்மையாகச் செய்து உரிய காலத்தில் முடிக்கும் ஆற்றல் இயற்கையாக அமைந்திருந்தது. அவரை ஒரு கர்ம வீரர் என்று கூறுதல் மிகையாகாது.

திரு. முதலியார் "சித்தாந்தம்" பத்திராசிரியராக இருந்தபோதும், அடக்கவிலை நூல்கள் வெளியிடும் காலங்களிலும், தாம் எழுதும் பகுதியை எழுதி ஒழுங்கு செய்து அச்சகத்திற்கு அனுப்பிவிட்டால், பின்னர் அச்சிடுங்கால் எழுத்துப் பிழைகளைத் திருத்துவது தவிர வேறு கூட்டல் குறைத்தல் முதலியன எதுவும் செய்யா இயல்பினர் அதனால் அவர் தரும் அச்சுவேலைகளைச் செய்ய அச்சகத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் முற்படுவர். இஃது அவர்தம் அச்சுத் தொழிலின் நுட்பம் உணர்ந்த பெற்றியைப் புலப்படுத்தா நிற்கும். அவர்தம் பருவுடல் மறையினும், நுண்ணுடல் நம் சமாஜத்திற்குத் தோன்றாத் துணையாக இருந்து சமாஜ வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக!

**மு. நாராயணசாமி முதலியார்,**
சாது அச்சகப் பொறுப்பாளர்.

### 3

நம் சமாஜத்தின் தந்தை மறைமலை அடிகள்; இதனைத் தாயாக வளர்த்தவர் ஞானியார் அடிகள்; வாழ்வித்தவர் நம் மா. பா. ஆவர். இன்று இம் மூவரும் மறைந்துவிட்டனர். இனிச் சமாஜத்தின் எதிர்கால வாழ்வு யாதாகும் என்றெண்ணி எண்ணி மிகவும் வருந்துகின்றேன். மா. பா. வைப் போல வினைத் திட்பம் வாய்ந்த பெரியார் மறைவு பொறுக்க முடியாத துன்பம் தருவதாம். அவர் மிக மிகக் கண்டிப்பானவர்; அச்சம் அற்றவர்; தளரா ஊக்கம்

உடையவர். சிறந்த அறிஞர். உயர்ந்த புலவர். அரிய தொண்டர். மிடுக்கும் துடுக்கும் மிக்கவர். ஆயினும் சமாச வளர்ச்சிக்காகத் தம் வாணாளை நல்கிய இப்பெரியாரின் நல்லுயிர் கபாலியின் சேவடியில் கலந்து ஆரா இன்பம் பெறுவதாக. சமாஜத்தின் எதிர்காலம் சிறக்க மறைமலை அடிகளைப் போற் பேரறிவும், ஞானியாரடிகளைப் போற் பேரன்பும், மா. பாவைப் போல் வினையாண்மையும் வல்ல ஒரு செயலாளரைச் சமாசத்திற்கு அருளுமாறு சிவபெருமானை இறைஞ்சுகின்றேன்.

வித்துவான் - **மறை. திருநாவுக்கரசு**

4

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி.எல். அவர்கள் நம்மைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தமை பற்றி அறியப் பெரிதும் வருந்தினேன். அவர்கள் எனதரிய பெரிய நண்பர்களுள் ஒருவர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தைக் கண்போலக் காப்பாற்றி வளர்த்து வந்தார். அதன் பெரு வளர்ச்சிக்கு அவரே காரணம் என்று சொல்லலாம். சித்தாந்தம் பத்திரிகையை அனேக வருடங்கள் அவரே ஆசிரியராக இருந்து நடத்தினார். கட்டுரைகள் எழுதுவதிலும் சொற்பொழிவாற்றுவதிலும் மிக்க திறமுடையவர். என்னோடு பெரிதும் நண்புரிமையும் சிவத் தொடர்பும் உடையவர். அனேக கூட்டங்களில் நானும் அவரும் கலந்து பணி செய்திருக்கிறோம். பல மேடைகளில் ஒருங்கே சொற்பொழிவாற்றி யிருக்கிறோம். நுண்மாண் நுழை புலமும் ஆராய்ச்சித் திறமும் உடையவர். சைவ சித்தாந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர். சிவபத்தி வாய்ந்த சீலர். அவரது பிரிவு சைவ உலகத்துக்குப் பெரு நட்டமாகும். அவரது இன்னுயிர் இறைவன் திருவடிக்கீழ் அமைதி பெற்றின்புறுவதாக!

**சம்பந்த சரணாலயத் தம்பிரான்** என்னும்

சிவக்கவிமணி - **C. K. சுப்பிரமணிய முதலியார் B.A.**

5

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தலைவரும், சைவ சமயத்தின் வளர்ச்சிக்காகவும், வாழ்விற்காகவும் அரும்

பணி செய்து கிடந்தவரும், என் மனத்திற்கினிய நண்பரு மாகிய மயிலைகிழார் மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த துயரச் செய்தியைக் கேட்டுப் பெரிதும் கலங்கினேன். ஏன்? சைவ உலகமே கையாறுற்றுக் கவலை எய்தியது. மயிலைகிழார் அவர்களைச் சென்ற 18 ஆண்டுகளாக யான் அறிவேன். அவருடன் நெருங்கிப் பழகும்பேறு 10 ஆண்டுகட்கு மேலாக எனக்குக் கிடைத்தது. திரு. முதலியார் அவர்களின் சமாஜத் தொண்டே என்னை அவர்பால் ஈர்த்தது. அவர் சொற்படியே 17 ஆண்டுகட்கு முன்பே சமாஜத்தின் ஆயுள் அங்கத் தவ ராகச் சேர்ந்தேன். என் நண்பர்கள் சிலரையும் ஆயுள் அங்கத்தினராகச் சேரும்படி ஊக்கினேன். 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சமாஜத்தின் 43-ம் ஆண்டு விழா யாழ்ப் பாணத்தில் நடந்தது. அதற்கு இவர்களே தலைமை வகித் தார்கள். கொழும்பில் நடந்த சமாஜத்தின் 44-ம் ஆண்டு விழாவிற்கும் முதலியார் அவர்களே தலைமை வகிக்க இருந் தார். அவருக்கேற்பட்ட உடல்நலக் குறைவின் காரணமாக அவர் வர முடியாமற் போய்விட்டது. அவருடைய இடத் தில் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

யான் 1947-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 1955-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் சென்னை சென்றபோது, என்னை அவருடைய இல்லத்திலேயே தங்கும்படி பணித் தார். அப்பொழுது அவருடைய இனிய பண்புகளையும், விருந்தினரைப் பேணும் முறைகளையும், குணுதிசயங்களை யும் அவதானிக்கவும் உணரவும் எனக்கு வாய்ப்புக் கிடைத் தது. அவர் என்னைச் சென்னையிலுள்ள பாடல் பெற்ற தலங்களாகிய திருவொற்றியூர் திருவான்மியூர் திருமயிலாப் பூர் திருத்தணிகை ஆகிய சிவஸ்தலங்களுக்கு அழைத்துச் சென்று வணங்கச் செய்தார். ஒருநாள் முழுவதும் என் னோடு உடனிருந்து, சென்னைப் பல்கலைக்கழக நூல்நிலை யத்தை யான் பார்வையிட உதவி செய்து அங்குள்ள நூல் களின் விவரங்களைத் தெளிவாக விளக்கிக் கூறினார். "மயிலைகிழார்" அவர்கள் பகலில் உறங்குவதை யான் ஒரு போதும் காணவில்லை. பெருஞ் செல்வராக இருந்தும் எளிய சாதாரண வாழ்க்கையே நடத்தி வந்தார்.

சைவ சித்தாந்தத்தை விளக்கும் பேரொளி அணைந்து விட்டது. அவருக்குச் சைவ உலகம் என்ன கைம்மாறு செய்யப் போகிறது. சைவ சித்தாந்த சமாஜம் ஒரு மணி மண்டபத்தை அவர் பெயரால் எழுப்பி, அவரின் உருவச் சிலையை அவ்விடத்தில் நிறுவுதற்கு ஆவன செய்யுமென்றே நம்புகின்றேன்.

**—அருள். தியாகராசா,** இலங்கை வானொலி, கொழும்பு-7

## 6

சித்தாந்தச் செம்மல் "மயிலைகிழார்" இறைவன் திருவடி எய்திய செய்தி அறிந்து ஆழ்ந்த துயருற்றேன். அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், சமயக் கூட்டங்களில் அவர்களுடன் சேர்ந்து பேசும் பேறும் பெற்றுள்ளேன். 1956-ல் பழநியில் நடைபெற்ற சித்தாந்த மாநாட்டில் "சேக்கிழார் பாடிய தேவாரம்" என்னும் தலைப்பில் யான் பேசிய பேச்சைக் கேட்டுப் பாராட்டிய தன்மையை யான் என்றும் மறவேன். சமயப்பணி புரியும் என் போன்ற இளைஞர்களை ஊக்கும் திறனமைந்த மயிலை கிழாரை மறக்க முடியுமா? மறந்தால் வாழ்வு உயருமா? மயிலைகிழாரின் தொண்டும் புகழும் வளர்க!

**—புலவர்மணி தி. க. சுந்தரமூர்த்தி**

## 7

மயிலநகர் மாநாடு மாண்புடைத்தாய் நடாத்தியநல் மாட்சி என்னே!, வெயிலிவரும் கோடையினில் வேண்டுவோர் உள்ளங்கள் விழைவாய்க் கேட்பப், பயிலியநற் சான்றவரைப் பாவநாசப் பதியில் பண்பாய்த் தூண்டிப், பயிலெவரும் பண்பட்டே பலவகுப்புப் போதித்த பான்மை என்னே!

ஒப்பிலா நம்நாட்டு உண்மைகளை உளமாரக் கூறும் வாயும், தப்பிலா மேனாட்டார் தன்மைகளைச் சார்வாகச் சாற்றும் சால்பும், செப்பிலா அனுபவமும் செழிப்பான நீறுடனே சிரிப்பும் பண்பும், ஒப்பிலா இனியவற்றை ஒருசேரக் காண்பதற்கோர் இடந்தான் என்னே!

**—வித்துவான் அம்பை, இரா. சங்கரனர்**

## 8

திருமயிலை தன்னில்திரு வருளகத்தில் திருப்புலிசை ஞானியாரோ(டு), அருமைமிகும் இசைவாணர் சுந்தரஓது-வாமூர்த்தி யார்தம் சீர்த்த, உருவமிரு பால்அமைய உவற்றி னிடைச் சிவம்தழைக்க அமர்ந்து ழைத்த, பெருமையினைக் கண்டுணர்ச்சி பெற்றவர் பல்லோர்! அதனைப் பேசற் காமோ?

மகப்பேறில் லாதஅவர் மகவெனவே சமாஜத்தை மதித்துப் பல்லாண்டு, உகப்போடு செயலாற்றி வளர்த்தார்! இன்றது தந்தை இழந்த ஒன்றாய், மிகப்பெரிதும் கலங்கியிருக் கின்றததை மணலிகுடும் பத்தார் மேவி, வகைப்படுத்தி நிலைப்படுத்தி வளர்ப்பதவர் உயிர்க்கமைதி வாய்க்கச் செய்யும்!

—சைதை. ந. ரா. ஆடலரசு

## 9

மயிலை கிழார் இளமைமுதலே சித்தாந்த உண்மைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த மேதை. அவைகளை மேலை நாட்டு நவீன விஞ்ஞானக் கருத்துக்களோடு ஒப்பிட்டு உணர்ந்து நன்கு விளக்கவல்லவர். பன்னிரு திருமுறைகளை யும் பதினான்கு சாத்திரங்களையும் பிற அரிய நூல்களையும் துருவி ஆராய்ந்த நுண்மாண் நுழைபுலம் மிக்கார். சிறந்த பதிப்பாசிரியர். நம் சித்தாந்த சைவம் எங்கணும் பரவ வேண்டுமென விரும்பி அல்லும் பகலும் அயராதுழைத்த செயல் வீரர். எங்கள் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை யின்கண் மிகுந்த ஈடுபாடுடையவர். இருமுறை தலைமை தாங்கியும், பல்லாண்டுகள் சொற்பொழிவாற்றியும் எங்கள் சபையின் வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டவர்.

"எழுபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர்த் தோற்று விக்கப்பெற்ற இச்சபையை ஞானத் தந்தையாக வளர்த்து வந்த பேராசிரியர் முதுபெரும் புலவர் ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் சிறியேன்மீது வைத்த பெருங்கருணையால் 1929-ம் ஆண்டில் நிகழ்ந்த நிறைவு விழாவில், அறிவிலும் அனுப வத்திலும் அகவையிலும் இளைஞனாய் இருந்த என்னைத் தலைமை தாங்குமாறு பணித்தார்கள். பிறகு பல்லாண்டுகள்

தொடர்ச்சியாகத் தவருது சொற்பொழிவு செய்யுமாறு கட்டளை இட்டார்கள். என்னைத் தமது புதல்வன்போல் எண்ணி அன்பு செலுத்தினர்கள். நானும் அவர்களைத் தந்தையாக எண்ணி, அன்பு செலுத்திப் பன்முறை எனது இல்லத்திலேயே உபசரித்தேன். இப்போது அப்பெரியார் திருவுருவம், எனது உளக்கண்முன் காட்சியளித்து, எனது தலைமைப் பணியைச் செவ்வையாக நிறைவேற்றுமாறு ஆசி மொழி கூறுகின்றது. இந்த ஆசிமொழியின் துணைகொண்டு நானும் எனது தலைமையுரையைத் தொடங்குகின்றேன்." என இரண்டு ஆண்டுகட்குமுன் எங்கள் சபையில் ஆற்றிய தலைமையுரையின் சில வரிகளே எங்கள் தொடர்பினைத் தெளிவுறக் காட்டும்.

**தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையார்**

## 10

உயர்திரு. ம. பா. அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தினர். நிலையிற்றிரியாது அடங்கி வாழ்ந்தார். நாம் 'ஞானி'யெனப் போற்றத்தகும் பண்பாளர். தாம் அறிந்ததை மிகு விளக்கமாகப் பேசும் ஆற்றலுடையவர். "சிவஞானபோதம் தமிழ் முதல்நூல்" என்று அஞ்சாது பல காரணங் காட்டி நக்கீரரைப்போல் சாதித்தார். ஆனல், அவை மாண்புடையன அல்ல. நான் சொன்னல் அன்பர்கள் வருந்தவேண்டா. ஞான முதல்வர்கள், ஞானத் தலைவர்கள் நன்கு உணர்ந்தே, அது மொழிபெயர்ப்பு நூலென்று எழுதினர்கள். உயர்திரு. ம. பா. அவர்களை அறியாதார் இல்லை. பொருள், கல்வி, பதவி முதலிய தகுதி வாய்ந்தவர். நம்மிடையிருந்து பிரிந்தார். நலமுடன் வாழ்வாராக!

சித்தாந்தப் பிரசங்காமிர்தம் **பூ. சமரபுரி முதலியார்**

## 11

சமாஜத்திற்குத் தூண்போன்று விளங்கியவர் திரு. ம. பா. அவர்கள். சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு இருக்கம் ஆதிமூல முதலியார் எப்படியோ, அப்படியே சமாஜத்திற்கு ம. பா. விளங்கிவந்தார். அவர்களின் பிரிவு சைவர்கட்குப் பேரிழப்பாகும். திருக்கூட்டத்தின் சார்பில்

நடந்துவரும் சிவஞான சித்தியார் வகுப்பில் ஆசிரியர் இளவழகனார் அவர்கள், மயிலை கிழார் அவர்களின் தொண்டின் மாண்புகளைப் பாராட்டிப் பேசத் திருக்கூட்டம் இன்று காலை (24-3-58) மயிலை கிழாருக்கு அஞ்சலி செய்து சிறப்பித்தது. அவர்தம் ஆருயிர், அம்பலவாணர் திருவடிக் கீழ் அமைதியுறுவதாக !

**ம. ரா. சம்பந்த நாயகர்,**
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

## 12

ஏவிளம்பி பங்குனிமுன் எய்ந்தவெள்ளி நள்ளிரவில்
சேவினிவர் தேவனடி சேர்ந்தனன்காண்—பூவுலகில்
சீலமுயர் கல்விவலான் சீர்கலைகள் ஆய்ந்துரைப்போன்
பாலசுப்ர மண்யபண் பன்.

ஆங்கிலத்திற் செந்தமிழில் ஆய்வுநிரம் பப்பெற்றோன்
வீங்குபுகழ் இவ்வுலகில் உற்றவனே—பாங்கிலுமை
கொண்ட பரமனடியிற் கூடிக் கலந்தனன்காண்
அண்டரும் போற்ற அமர்ந்து.

பண்டித வித்துவான் - **இராமகோவிந்தசாமி பிள்ளை**

## 13

உன்றலையில் வாழ்நாள் உரம்எழுதா நான்முகனை
இன்னமுங்குட் டிச்சிறைவேள் ஈட்டானே—மன்னுபுகழ்
பாலசுப்ர மண்ணியபெண் பாகன்முன் போற்கூற்றைச்
சாலஉதைத் திட்டிலனே தான்.

பொன் - **குமாரசாமி அடிகள்**

## 14

சந்திரனில் லாவானும், தாமரையில் லாக்கயமும்
மைந்தரில்லா வாழ்வும்போல் மங்குமே—பைந்தமிழும்
பாலசுப்பி ரம்மணியன் பாரில் மறைந்ததனால்
சால மிகத்தளர்ந்தே தான்.

பொன் - **சண்முகனார்**, காஞ்சிபுரம்

## 15

திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் சைவசமயத்துக்குச் செய்த தொண்டு அளவிடற்கரியது. பல ஆண்டுகளாக அவர்கள் சைவ சித்தாந்த சமாஜத்தின் உயிர் நிலையாக விளங்கினார்கள். சமாஜம் அரிய நூல்களை அடக்கவிலைப் பதிப்பாக வெளியிடுவதற்கு அவர்கள் பெருந் துணை புரிந்தார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிக் குறிப்பு களால் அவை தனிச்சிறப்படைந்தன. அவர்களுடைய நினைவு சைவ அன்பர்கள் உள்ளத்தில் என்றும் பதிந் திருக்கும் என்பது திண்ணம்.

இலங்கை சு. **நடேச பிள்ளை,** பி. ஏ., பி. எல்.

## 16

அருட் செல்வமும் பொருட் செல்வமும் இணைந்து வாழ் வதை வெகு சிலரிடத்தே தான் காணமுடிகிறது. அச் சிலருள் காலஞ் சென்ற ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஒருவராவர். இயற்கை அறிவும் புலமையும் படைத்திருந்த அவர், தமிழகத்தின் சமய வாழ்வுக்காகச் செய்த தொண்டு மிகச் சிறந்ததாகும். சைவத் திருமுறையையும் வைணவ அருள் நூல்களையும் நன்கு கற்றிருந்த அவர், சைவத்தில் அழுத்தமான பற்றோடு ஏனைய சமயங்களிடம் எவ்வாறு அன்பு கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு இளஞ்சைவர் களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார். 'என் செய்வான் தோன்றினேன்' என்ற தலைப்பில் சுருக்கமாகத் தம் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டார். தமிழுக்கும் சமயத் திற்கும் சிறந்த தொண்டு செய்யத்தான் தோன்றினார் என் பதற்கு அவர் வாழ்க்கையே சான்றாகும். எம்பிராற்கு அவர் இனியவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை !

**டாக்டர். வ. ஆ. தேவசேனாபதி,** எம்.ஏ., பிஎச் டி.

## 17

"மா. பா" அவர்கள் சிவபத மடைந்த செய்தியை அறிந்து ஆற்றொணாத் துயர் அடைந்தேன். சைவ உலகம் ஓர் அரிய தொண்டரை இழந்து விட்டது. அவர்கள் சைவ சித்தாந்த சமாஜத்துக்குக் காரியதரிசியாகவும், பத்திரிகை

ஆசிரியராகவும், தலைவராகவும் ஒப்பற்ற தொண்டுகள் புரிந்துள்ளார்கள். சமாஜத்தைப் பற்றி நினைக்குந்தோறும், " ம. பா. " அவர்கள் நினைவே முன்னுக்கு வரும். சமாஜத்தோடு அவர்கள் அப்படி அத்துவிதப்பட்டுவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் 1948-ல் நடைபெற்ற சைவர் மகாநாட்டுக்கு அவர்கள் தலைமை தாங்கினார்கள். யான் காரியதரிசியாகக் கடமையாற்றினேன். இந்த மகாநாட்டுக்கு ஒரு கூட்டத்தாரிடமிருந்து எதிர்ப்பு இருந்தது. அவற்றையெல்லாம் தமது பேரறிவினாலும், பேராற்றலினாலும் புறங்கண்டு மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடித்தார்.

அவர்கள் வெளியிட்ட அடங்கன் முறையும், பெரியபுராணமும், திவ்வியப் பிரபந்தமும் அவர்களுக்குச் சிறந்த ஞாபகச் சின்னங்களாக விளங்கும்.

யாழ்ப்பாணம் **அம்பிகைபாகன்,** பி. ஏ.

## 18

சைவப் பெரியார் மயிலை கிழார் இளமுருகனார் அவர்கள் ஐம்பதாண்டுகளாக நமது சைவ சித்தாந்த சமாசத்தைப் போற்றி வளர்த்த புகழாளர், திருமுறை நூல்களையும் மெய்கண்ட நூல்களையும், சீவக சிந்தாமணி, திருப்புகழ் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருப்பாவை வியாக்கியானங்கள் முதலிய தமிழ் நூல்கள் பலவற்றையும் யாவரும் குறைந்த விலைக்குப் பெற்றுப் படித்து மகிழ்தற்குரிய வகையில் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அடக்க விலையில் வெளியிட்டுதவிய பெருந்தமிழர், சங்க இலக்கியம் அனைத்தையும் குறைந்த விலையில் முதன் முதல் வெளியிடச் செய்த பெருமை திரு. முதலியாரவர்களுக்கே சிறப்பாக உரியதாகும். இவ்வாறு தமிழ் நூல்கள் பலவற்றையும் நம் சமாசத்தின் வாயிலாகவும் தம் சொந்தப் பொறுப்பிலும் அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் திருத்தமாகவும் அடக்க விலைக்கு வெளியிட்டுதவிய இவர்களது நுண்ணறிவும் சமயப் பற்றும் மொழிப் பற்றும் அல்லும் பகலும் இடைவிடாது கலைத்தொண்டு புரியும் பேரார்வமும் நமது சமாசத்திற்கும் சித்தாந்தத்திற்கும் வளர்ச்சிதரும் ஆற்றல் மிக்க சாதனங்களாகப் பெரிதும் பயன் தந்தன என்பதைத் தமிழ்

மக்கள் நன்குணர்வார்கள். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற பொருள் மொழிக்குரிய சிறந்த இலக்கியமாக வாழ்ந்த திரு. முதலியாரவர்களது பெரும் பிரிவு தமிழ் நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் களது அறிவுடன் பொருந்திய நல்லுழைப்பு தமிழிளைஞர் களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கவேண்டு மெனவும் அவர்களது நல்லுயிர் தில்லையம்பலவன் திருவடி நீழலிற் கலந்து மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தல் வேண்டும் எனவும் இறைவன் திருவடிகளை வணங்குகின்றேன்.

வித்துவான் - க. வெள்ளைவாரணர்

## 19

தென் இந்தியாவிலும், இலங்கை நாட்டிலும், மலேயா முதலிய தமிழ் பேசும் மற்ற நாடுகளிலும் உள்ள தமிழ் மக்களும், சிறப்பாகச் சைவர்களும், சிறிது நாட்களுக்கு முன்னர் நம்மெல்லோரையும் விசனக் கடலில் ஆழ்த்தி அமரர் வாழ்வை யடைந்த திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரை நன்றாய் அறிவர்.

நான் நம் முதலியாரையும், அவர் பெற்றோர், மற்ற நெருங்கிய உறவினர்களையும் 50 வருடங்களாக அறிவேன். இது காரணம் பற்றிச் சிறிது எழுத ஆசைப்படுகிறேன்.

அவர் சிறு பிராயத்தில் கல்வியில் சிறந்த மாணாக்கர் களில் தலைமைப் பதவியை அடைந்து, பிறகு நியாயவாதி யாக இருந்து 20-ஆண்டுகள் திறம்பட விளங்கி, அத்துறையி லிருந்து விலகினார். சைவ வைஷ்ணவ நூல்களைப் பிழையற அச்சிடுவதிலும், நம்முடைய சைவ சமாஜம் தொடர்ச்சி யாகத்தொண்டாற்றுவதிலும் தன்னுடைய காலம், கருத்து முழுவதையும் பயன்படுத்தினார்.

அரசாங்கத்தில் அவர் ஒரு பதவியை ஏற்றுக்கொண்டி ருந்தால், அதில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருப்பார். நியாயவாதியாகத் தொழிலாற்றுவதிலே யிருந்து விலகாமலி ருந்தால் உயர்நீதி மன்றத்தின் நியாயாதிபதியாக விளங்கி யிருந்திருக்கக் கூடும்.

நமது மாகாண சபையிலும் தொடர்ந்து அங்கத்தின ராக இருந்து அரசியல் துறையில் உழைத்திருந்தால் நம் மாகாணத்தில் ஒரு சிறந்த அமைச்சராகத் திகழ்ந்திருக்கக் கூடும். இறைவன் திருவருள் அவரைச் சைவத்திற்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றும்படி கூட்டி வைத்தது.

சிறந்த அறிவாளி, அடக்கமே உருவாகித் திகழ்ந்தவர், தான் எடுத்தக் காரியத்தை விரைவாகத் திறம்பட நடத் தியவர். சைவத்திற்குச் சென்ற முப்பத்தேழு (37) ஆண்டு களாகப் பணியாற்றி 12 திருமுறைகளையும், 14 சாத்திரங்களை யும், திருப்புகழ், நாலாயிரப் பிரபந்தங்கள், ஸ்ரீ ஆண்டாளம் மையார் திருப்பாவை நூற்களை ஒரு முறை, இரண்டு முறை தன்னுடைய முகவுரை, ஆராய்ச்சியுரை முதலியவை களுடன் அடக்க விலைக்குப் பதிப்பித்து உலகத்தவர்கட்குச் செய்த உதவியை, நாம் எல்லோரும் போற்றுவதென்றால் அவர் தன் உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றி வந்த சைவ சமாஜத்தை, அவருடன்கூட இதுகாறும் உழைத்து வந்த அன்பர்களும், அவர்களின் தோன்றல் களும் மற்ற அன்பர்களும் பலவிதங்களிலும் சிறப்புறச் செய்வதே நம்முடைய கடமையாகும்.

“எல்லா நலமுமினி தமைந்தோன் மயிலைநகர்
நல்லார்புகழ் பாலசுப்பிரமணிய முகிலிறந்த
பொல்லாத வோசை யிடிபோலத் தமிழ்க்குயிலை
வல்லாமை செய்து வருத்தத் திருத்தியதே”

**இராவ்பகதூர். க. அரங்கசாமி முதலியார்**, பி.ஏ.

## 20

Slightly my senior in the P. S. High School, Mylapore, M. Balasubramaniam was constantly held up before us by our teachers as a worthy model to follow, since he was not only good (and equally good) at Tamil, English and Mathematics, but impeccable in his behaviour. This respect, conceived in youth, came to be confirmed and deepened in later years by closer acquaintance with his profound learning and goodness of heart.

By unanimous acclamation annually renewed, he was in practice the perpetual President of the P. S. High School Old Boys' Association.

His lifelong mission was to edit accurately and publish at cost price the treasures of Tamil poetry. The arrival of each Samajam Volume was eagerly looked forward to and joyfully celebrated in the homes of his friends. One remembers with pride how promptly he sent each book when ready and with self-respect how he took the correct price.

As a member of the Government Arts College Advisory Committee, during the time I was principal, he held the balance even between contending claims. In all his words and deeds, one noticed an admirable sense of justice, working with the calmness and clarity of an aristocratic spirit. In the minds of many of his friends and admirers, the memory of this great lover of Tamil and truth will merge in the larger vision of the singing Saints of Tamil Nad.

Prof. K. SWAMINATHAN,
*Editor, Indian Express*

## 21

சைவப் பெரியார் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மறைவு கேட்டுத் திடுக்கிட்டேன். அப்பெரியார் நாற்பது ஆண்டுகளாகச் சைவ உலகில் பெருந் தொண்டு செய்தவர்; சிறந்த புலமை உடையவர். "சித்தாந்தம்" என்னும் திங்கள் தாளைத் திறம்பட நடத்தி வந்தவர்; சைவ சமய வளர்ச்சிக்கு அரும் பாடு பட்டவர்; எப்பொழுதும் இன்சொல்லும் நகைமுகமும் உடையவர்; அடக்கவிலைப் பதிப்புக்களை வெளியிட்டுப் புகழ்பெற்றவர்; வைணவத்திலும் ஈடுபாடு உடையவர். அவரது ஆன்மா அமைதியுற ஆலவாய்ப் பெருமான் இணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

டாக்டர் - **மா. இராசமாணிக்கனார்**

## 22

திரு. மயிலைகிழார் ம. பா. அவர்களது மறைவு சைவ உலகிற்கு ஒரு பெரிய இழப்பு. சைவ அறிஞர்களையும் அன்பர்களையும் திடுக்கிடச் செய்துவிட்டது.

ம. பா. அவர்கள் சாந்துணையும் கற்றுவந்து, அக் கல்வியறிவைப் பிறர்க்குப் பயன்படவைத்தவர். தமிழகத்தின் சிறந்த சமய அமைப்பாக உள்ள சைவசித்தாந்த மகாசமாசத்திற்குப் பெருந் தூணாக நின்று மெய்வருத்தம் பாராது பணிசெய்தவர். எண் பொருளவாகச் செலச் சொல்லும் இயல்பும், தாம் கூறும் முடிபைப் பல்லாற்றாலும் பரந்துள்ள பிரமாணங்களைத் தேடிக் கோவைப்படுத்திக் கூட்டி நிலை நாட்டும் வன்மையும் அவர்க்குச் சிறப்பாக இருந்தன. பெரும் செல்வராக இருந்தும் சைவத் தொண்டு புரிதற்கு வெளியூர்களுக்குச் செல்லும்போதெல்லாம் எளிமையாக வாழும் அரிய இயல்பினர். எவ்வகையினும் தம் கருத்தை விட்டுக்கொடாத மனத்திட்பம் உடையவர். பலருக்கு உபகரிக்கும் மாண்பு உடையவர்.

அவர்தம் ஆருயிர் இறைவன் திருவடிக் கீழ்ச் சென்றங்கு இன்புற்றமர்க.

**க. வச்சிரவேல் முதலியார், பி.எ., எல்.டி.**

## 23

மயிலைகிழார் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இறைவன் திருவடி நீழல் எய்தியதறிந்து மிக வருந்துகிறேன். அவர்களது பெரும்பிரிவு ஈடுசெய்ய முடியாததோர் இழப்பேயாகும்.

முதலியாரவர்கள் சிவநெறிக்கும் செந்தமிழ்க்கும் ஆற்றிய அரும்பணிகள் அளப்பில. சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் முதலான அரும்பெறல் நூல்களைத் திருந்திய மூலபாடம், ஆராய்ச்சி முன்னுரை, அரும் பொருளகராதி, ஒப்புமைப் பகுதிகள், பாட்டு முதற்குறிப்பு, பாடவேறுபாடு, உறுதியான கட்டிடம் ஆகிய இவற்றுடன் நல்ல தாள்களிற் பதிப்பித்து அடக்க விலைக்கு வழங்கிப் பிறர்க்கு வழிகாட்டிய பெருமை மயிலைகிழார், ம. பா. முதலியார் அவர்களுக்கே உரியது.

அவர்களது நல்லுயிர் சிவபரம்பொருளின் திருவடி நீழலிற் கலந்து ஆரா இன்பந் துய்த்து அமைதியுறுவதாக என எல்லோரும் வேண்டுவோமாக.

வித்துவான் - மு. அருணாசலம் பிள்ளை

## 24

திரு. " மயிலைகிழார் " அவர்கள் மறைவு சைவ மக்களுக்கு ஒரு பெருந் துயரைத் தருவதாகும். உழைப்பால் உயர்ந்த பெரியாராகிய அவர் தமது வாழ்நாள் முழுதும் தமிழுக்கும்,சிறப்பாகச் சைவத்திற்குமாக அறப்பணிசெய்து புகழுடம்பு பெற்றார் எனில் மிகையாகாது. ஆற்றல் மிகப் படைத்தவர். சிறந்த நட்பினரையும் பெற்றுச் சைவசித்தாந்த நூல்கள், திருமுறைகள் பலவற்றையும் அடக்க விலைக்குச் சைவ உலகம் பெறச் செய்தவர். இன்னும் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முழுப் பொறுப்பையும் அவர் தாமே மேற்கொண்டார்; எளிய வாழ்வில் மனங் கொண்டு, செயற்கரிய செய்யும் மாண்பினர். சைவ இளைஞர்கள் அவரைப் பின்பற்றி, சைவ சமயப்பணியில் ஈடுபடுவார்களாக.

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி.எ.,பி.எல்.

## 25

மறைந்த அன்பர் ம. பா. அவர்கள் சைவ உலகுக்கும் தமிழ் உலகுக்கும் செய்த தொண்டுகள் அளப்பில. ஆரவாரமின்றி அமைந்த பெருநெறி நின்ற சமாசச் செயலாளராகவும் தலைவராகவும் இருந்து ஆற்றிய அருஞ்செயல்கள் பல. சமய இலக்கியங்களை ஆயிரக்கணக்கில் அடக்கவிலையில் கொணர்ந்து வீடுதொறும் கலைவிளக்கம் செய்த பண்பாளர் அவர்கள். சமயப்பற்று ஒன்றையே கொண்டு, சமயக் காழ்ப்பு இன்றி, பிரபந்தம், சிந்தாமணி போன்ற இலக்கியங்களையும் வெளிக் கொணர்ந்து பரந்த சைவநெறி வேறுபாடற்ற ஒன்று என்பதைச் செயலில் காட்டிய தீரர் அவர்கள். அத்தகைய நல்லார் - இன்முகத்தோடு அனைவரையும் வரவேற்கும் பண்பாளர்-சிந்தை யெல்லாம் சிவன்பால்

வைத்த செம்மல் இன்று அச்சிவனுடன் சேர்ந்து தாமும் சிவமாயினர். அவர் பிரிவு தமிழ் உலகுக்கு ஈடு செய்ய முடியாத ஒன்று. அவர் உயிர் இறையடிகளில் இன்புற்றிருக்கவும், சைவத் தமிழ் மக்கள் அவர் காட்டிய வழியில் பணிபுரிந்து சிறக்கவும் அருள் இறைவனை வேண்டுகின்றேன்.

**அ. மு. பரமசிவானந்தம்** எம்.ஏ., எம். லிட்.

## 26

நமது சைவ சமாஜப் பெருந் தலைவர் திருவாளர் ம. பா. அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாததொன்று. இவர் சைவ சமயத்தில் வைத்திருந்த பற்றுக்குச் சமானமாக வைணவ சமயத்திலும் பற்றும், ஈடுபாடும் கொண்டிருந்தமை குறிக்கத்தக்கது. தூக்கி வினைசெய்யும் திட்பமுடையவர்; குன்றனைய குணமுடையவர்; உடலினை ஓம்பி வந்தவர்; செல்வச் செருக்கற்றவர். விழாக்களிலும், இல்லறச் சிறப்புச் சடங்குகளிலும் விடாத பற்றுடையராகத் திகழ்ந்தார். இவர் நட்பு தேங்காயைப் போன்றது. எங்கள் ஞானியாரிடத்தில் பேரன்புடையவர். அடியேனுக்கு ஒரு தமையனாரைப் போன்றிருந்தார். சைவ அன்பர் திருத்தோற்றம் சிவமாய்த் திகழ்க!

" அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே "

(**திருமந்திரம்**)

சித்தவைத்தியர் **பு. வே. தேவராஜ முதலியார்,**
திருப்பாதிரிப்புலியூர்

## 27

" திரு. ம. பா. அவர்கள் தான் நினைத்த செயலை உறுதியோடு முடிக்கவல்ல ஆற்றல் படைத்த பெருமகனர். பல

இளைஞர்களைப் பரிவோடு முன்னணிக்குக் கொண்டுவந்த பெருமை யுடையவர். நண்பர்களோடு கருத்து வேறுபாடு தோன்றும் காலத்துத் தம் கருத்தை வெளிப்படையாக எடுத்தியம்பி அவர்களையும் தம் வழிப்படுத்தும் நற்பண்பாளர். சைவத்திற்கும் தமிழுக்கும் அவர் ஆற்றிய அருந்தொண்டு யாவரும் அறிந்ததே. வெகு நாட்கள் வரையிலும் சமய உலகிலே அவர் இழப்பு ஈடுசெய்ய வொண்ணாத பேரிழப்பாகவே இருந்து வரும்.''

**க. வடிவேலாயுதன், எம். ஏ**

## 28

மயிலைகிழார் மா.பாலசுப்பிர மணிய வள்ளல்
மதிநுட்ப மிகவுடையர் மலைமகள்தன் கேள்வன்
கயிலையுற்றார் கண்ணுதலோன் கழல்வழிபாட் டுறைப்பால்
கண்ணுசைவ சித்தாந்த மாக்கழகத் தூணாய்
அயில்வேலோன் தன்னருளால் அலைமலைகள் அகன்றும்
அன்பறிவு மிகநாட்டி நூல்பரப்பி ஆர்ந்தார்
பயில்நண்பர் மனமாழப் பார்விடுத்தா ரேனும்
பரமனடி இன்புறுவர் பணிபுரிந்த பாங்கால்.

பாங்காரும் திருமுறைகள் பொருள்நூல்கள் பண்டைப்
பயன்புலவர் தொன்னூல்கள் பின்னூல்கள் பலவும்
ஆங்காங்கு மிகவெளிதாய் மலிவுடனே யார்க்கும்
அடுத்தடுத்துக் கிடைக்குமா றரும்பதிப்பிங் காற்றி
நீங்காத பெரும்புகழை நேடிநனி யுயர்ந்தார்
நிறைதமிழின் சிறப்பெல்லாம் சிவஞான போதம்
தூங்காத தமிழ்முதனூல் எனத்துணிந்த தூயோர்
தொண்டினைப்பின் தொடர்ந்தவர்க்குச் சொல்லுவம்நல் வாழ்த்தே.

சித்தாந்த பண்டிதர், திருவள்ளுவரகம்
**ப. இராமநாத பிள்ளை**

## 29

மாபா? சைவ மதக்களிறே? மன்னுஞ் சமயக் குரவாருள்
மாபா சுரங்கள் நிறையுளத்து மலைவில் பொருள்தேர் மதிநிறைவே!
மாபா தகத்தி லுறவழுத்தும் மதனற் கசையா மணிமலையே !
மாபா ரதத்தில் கலையாய்வார் குழுவி லொளிரும் மாமணியே !

சேக்கி ழார்தன் பதம்மறவாய்! சிந்தா மணியுஞ் சிந்திப்பாய் !
நாக்கிற் கிறைமா மொழிநயப்பாய் ! நாலாயிரத்தின் பாலார்வாய் !
போக்கிற் பிறழ்ச்சி யொன்றுமிலாய் ! புரைதீர் சைவநெறி வழுவாய் !
நோக்கிற் சைவம் பிறமதத்தை நோவாதணைத்தல் நோன்பென்றோ?

முத்து முத்தாய் எழுத்தமைத்தே முழுதுஞ் சத்தே நிறைநூல்கள்
மெத்த ஆய்வு மழகுமுற மிகவுங் குறைந்த சிறுவிலைக்கே
விற்று நிரப்பும் பணிபுரிவார் விரல்விட் டெண்ண வேறுளரோ ?
ஒற்றைக் காசும் விரும்பாமல் உலகொத் தாசைக் குழைத்தோனே !

மறந்தாய் கொல்லோ வெமையெல்லாம்? முயற்சிக் காகா மாந்தரெனத்
துறந்தாய் கொல்லோ? சோம்பலிலாக் கருவிலமைந்த சுருசுருப்பே !
நிறைந்தாய் நினைவால் திருவாக்கால் நெறியார் செயலா லென்றென்
சிறந்தாய்! பால சுப்ரமண்யச் செல்வா! அழியாச் சிவச் செல்வா! [றும்

அண்ணா மலையில் குடியிருக்கும் அமைப்பா லெங்கட் கருவிருந்தாய் !
நண்ணா ஆண்டு தொறுங்கார்த்தித் திருநாளுற வெம்முறவானாய் !
எண்ணா லடங்காச் சிறப்புற்றோம்! எளியோர்க் கெளிய எந்தால்! நீ
விண்ணோர் விருந்தா னமைகேட்டே மெலிந்தோம்! தவத்தின்
[மெலிந்தோமே !

ஞான வுலாவை நன்காய்ந்தாய்! நம்பனுலாவைக் கண்டாயோ ?
தேனின் திருத்தாண்டக மியம்பும் திருநெல் வேலிச் சுந்தரனார்
கானங் கேட்டே மகிழ்ந்தாயோ? திருவிகாவைக் கண்டாயோ ?
ஞானி யாரே முதற் பெரியோர் வருகென் றழைத்தே நயந்தாரோ?

புரிசை - சு. முருகேச முதலியார்

# இரங்கற் கோவை

**ஆறுதல் வழங்க வேண்டுவோம் :** திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் அவர்களைத் தமிழ் அறியும்; அதை விடச் சிறப்பாகச் சைவ சமயம் அறியும். அம்மட்டோ ! வைணவ சமயமும் பிற சமயங்களும்கூட நன்கறியும். சைவ சித்தாந்த மகா சமாஜம் என்னும் கோவிலுக்கு அப்பராய் நிலவி உழவாரத் தொண்டாற்றினார் திரு. ம. பா. அவர்கள்.

உச்சிக்குடுமி காற்றில் திருக்கூத்தாட, நெற்றியில் திருநீற்றொளி பேரழகு வீச, முகத்தில் புன்சிரிப்புத் தவழ, ஒரு தோள் எழுந்தும் விழுந்தும் தாள இசை காட்ட, மெத் தென்ற மொழியில், ஆற்றொழுக்காக, ஆழ்ந்தகன்ற நுண்மாண் நுழைபுலம் தோன்றத் திரு. ம. பா. அவர்கள் மேடையில் நின்று பேருரை நிகழ்த்துங்கால், ' நீறு பூத்த நெருப்புக்கொல் இவர் !' எனக் கேட்போர் பாராட்டி அவர் மொழியை மேலும் மேலும் கேட்க வேட்கையுறுவர்.

சிறந்த தமிழராய்ச் சைவ சமயப் பெருஞ்செல்வராய்க் கேட்டார்ப் பிணிக்கும் கேள்வராய்ப் பதிப்பாசிரியராய்ச் சமரச உள்ளம் சான்றவராய் உற்றார்க்கெல்லாம் நற்றுணை வராய் நண்பராய் இலங்கிய திரு. ம. பா. அவர்கள் மறைவு கேட்டதும் நெஞ்சம் திடுக்குற்றது. தமிழ் வேறு சமயம் வேறு என்று பிரிக்க ஒண்ணாத தமிழன்னைக்கு நெஞ்சம் வெந்தே போயிருக்கும். அவள் பராக்குப் பார்த்திருந்த வேளையில் தான் அவரை யாரோ அகற்றிச் சென்றிருக்க வேண்டும். பூத வுடலுக்குப் புள்ளிக் கணக்குப் போடுபவர் அவரை அகற்றிச் சென்றனர் என்றால், நல்லுடல் மற் றொன்று கொடுத்து அவரை உடனே எம்பால் அனுப்புக என்று மன்றாடுவோம். கூத்தப் பிரானின் தூக்கிய திருவடி நீழலில் தங்கச் சிவ கணங்கள் அவரை அகற்றிச்சென்றனர் என்றால், எங்களுக்கும் தமிழன்னைக்கும் ஆண்டிருந்தே ஆறுதல் வழங்குக என்று அவரை வேண்டிக்கொள்வோம்.

**டாக்டர். மொ. அ. துரையரங்கனார்,**

எம்.எ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

**கொற்றட்டி ஆளாக்கினர் :** மயிலைகிழார் அவர்களை 1930 முதலாக அறிந்துளேன். 1944-45 ஆண்டுகளில் மயிலையில் அவர் வாழ்ந்த திருவருளகத்தில் சிவஞான சித்தியார் வகுப்பு வைத்து, என்னைக் கற்பித்து வரச் செய்து தாமும் உடனிருந்து பிறர்க்கு வழிகாட்டினர். முதலியார் அவர்கள் தமிழ் வடமொழி ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் சாலச் சிறந்த ஞானம் பெற்றவர், வாழத் தெரிந்தவர். ஆண்டு தோறும் திருவண்ணமலை, தில்லை ஆகிய தலங்களில் நிகழும் பெரு விழாக்களுக்குச் சென்று தரிசிக்கும் இயல்பினர். செய்வன திருந்தச் செய்யும் பண்பினர். கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்கவர். சுருங்கச் சொல்லின் முதலியார் அவர்களை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒப்புயர்வற்று விளங்கிய தனிப் பிறவி என்று சொல்லி இன்புறலாம். சைவம் வளர்த்த அவர் வைணவ நூலும் தந்தார். பாவையர் விழையாரேனும் பாவையின் உரைச்சீர் தந்தார். அவர் அறியாத கலை ஒன்றும் இல்லை. எப்பொருளைக் குறித்துக் கேட்டாலும், முன்பே சித்தம் செய்து வைத்துக் கொண்டாரோ என்று வியக்கும் வண்ணம் விடையிறுப்பார். சாத்திரப் பயிற்சியில் ஆங்கிலக் கலையுணர்வால் ஏனையோரை விஞ்சியவராய் விளங்கினர். கல்வெட்டாராய்ச்சியிலும் மிகச் சிறந்தவராய், எல்லோரையும் கொற்றட்டி யாளாக்கினர். திருவண்ணமலைத் தலவரலாறு முதலியவற்றால், அத்துறையில் அவர்தம் பெருமை இனிது விளங்கும். அவர்களது பிரிவு தமிழுலகிற்குப் பெரிதும் இழப்பாகும்.

**முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்**

**புலமை பெரிது :** திரு. முதலியார் அவர்களின் புலமை மிகமிகப் பெரிது. தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும் மும்மொழிப் புலமைச் செம்மலார். இந்து என்னும் சொல் தாவரப் பொருளையும், கவ்வை என்னும் சொல் விலங்கினத்தையும் குறிக்கும் எனத் தேவாரப் பாடல்களைக் கொண்டு விளக்கியுள்ளார். இவர் தம் நுண்ணறிவுத் திறனை விளக்க இச்சிறிய எடுத்துக்காட்டுக்களே அமையும். காசி அலகாபாத் பல்கலைக் கழகங்களில் இவர் ஆற்றியுள்ள ஆங்கிலச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்தக் கருத்துக்களை எளிமையும் இனிமையும் தெளிவும் அமைய விளக்கும் இவர்தம்

திறனை நன்கு புலப்படுத்துகின்றன. வடமொழியிலும் இவர்க்குச் சிறந்த புலமையிருந்தது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருப்பாவை வியாக்கியானங்கள் ஆகியவற்றை மயிலை மாதவதாசன் என்னும் பெயராற் பதிப்பிட்டு, இவர்கள் வைணவ நெறியையும் போற்றிய பரந்த மனப்பான்மை பெரிதும் போற்றத்தக்கது. அத்தகைய பெரியாரின் மறைவு நம்மனோர்க்குப் பேரிழப்பாகும். அவர்தம் ஆருயிர் அம்மையப்பரின் திருவடி நீழற்கீழ் அமர்ந்தின்புறுவதாக!

பேராசிரியர்-பாலூர்-**கண்ணப்ப முதலியார்,** பி.ஓ.எல்.

**மாபெருந்தூண் சாய்ந்தது :** சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மையத்தூண்போன்ற மாபெருந் தலைவராய ம. பா. அவர்கள் மறைந்தது சைவ உலகத்தையே திடுக்குறச் செய்தது. மறைவுக்கு இரு மாதத்திற்கு முன் எங்கள் அழைப்பைத் தட்ட விரும்பாது வந்திருந்து, திருவெம்பாவை—திருப்பாவை பற்றிப் பேசி மக்களை மகிழ்வித்தது இன்னும் எம் மனக்கண் முன் நிற்கின்றது. ஆன்றவிந்த அடக்கமும், தோற்ற எளிமையும், பொறுமையும், கடமை யுணர்ச்சியும், நகைச்சுவையும், சமயப்பற்றும், அறிவும் அவரிடம் பொலிந்து விளங்கியதை நெருங்கிப் பழகினோர் அனைவரும் அறிவர். அண்மையில் எமது குடும்பத்தில் வெளியிட்டதொரு சிறு நூலில் எம்மையும் அறியாது விழுந்துவிட்ட அச்சுப் பிழைகளை எண்ணிப் பார்த்தபோது, நூற்றுக் கணக்கான பக்கங்களையுடைய பல அரும் பெரும் நூல்களைப் பிழையறப் பதித்த ம. பா. அவர்களின் அரிய ஆற்றலை நினைந்து நினைந்து வியந்தோம். தாமரை இலைத் தண்ணீர்போல் இல்லறம் நடத்திய அப்பெரியார், நண்பர்களின் இல்லங்களில் எச் சடங்கு நிகழினும் கலந்துகொள்வதைக் கடமையாகக் கொண்டவர். பெருஞ் செல்வராக இருந்தும் பொருள்விரயம் என்பதை அறவே வெறுப்பவர். 30 ஆண்டுக்கும் மேலாகவே வைத்திருக்கும் தமது சோப்புப் பெட்டி முதலியவைகளை நண்பர்களுக்கெல்லாம் காட்டி மகிழ்வார். அவரது நகைச்சுவை வியத்தற்குரியது. இளையோர் முதியோர், ஆஸ்திகர் நாஸ்திகர் யாவரிடமும் ஒப்ப உரையாடி மகிழ்விக்கும் தனியாற்றல் அவரிடம் சிறந்து பொலிந்தது. அத்தகையதோர் சமாஜத்தின்

அருந்தூண் சாய்ந்ததே ! இனி அதற்கு நிகராகச் சமாஜத்தினைத் தாங்கிப் பொறுத்தற்குரிய தூண் பிறிதொன்று கிடைக்குமோ ?

**அ. காமாட்சி குமாரசாமி** எம்.ஏ., சேலம்

**எங்களுக்கெல்லாம் பெருநஷ்டம் :** திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மறைவுற்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருந்துகின்றேன். எனது தந்தை மயிலை பி. எஸ். ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியராய் இருந்த காலத்தில், அப்பள்ளி தொடங்கின் முதலாண்டில் அதிற் சேர்ந்து படித்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் முதலியாரவர்கள் திறமையுடன் தேறியவர்களில் ஒருவர். அந்நாளிலேயே அவருடைய அமைதியான குணமும், ஆஸ்திகச் செல்வமும், பரிவு கலந்த நட்பும் அவர் முகத்திலும் நடைமுறையிலும் பொலியும். ஹைஸ்கூலின் பழைய மாணவர் சங்கம் நிறுவப்பட்டபொழுது முதலியாரவர்களை நாங்கள் அனைவரும் ஒரு மனமாக அச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தோம். அன்றுமுதல் இன்றுவரை அவரே எங்கள் தலைவராக இருந்து வந்தார். அவ்விஷயத்தில் நாங்கள் எல்லோரும் மிகுந்த பெருமிதம் அடைந்தோம். அன்னார் மறைந்தது எங்களுக்கெல்லாம் பெரிய நஷ்டம்.

பேராசிரியர் **சங்கர நாராயணன்**, எம்.ஏ.

**அவர்தம் நூல்களுட் சிறந்தன :** திரு. முதலியார் அவர்கள் எங்கள் காஞ்சி மெய்கண்டார் கழகத்துடன், அன்பினால் அதன் தொடக்கத்திலிருந்தே தொடர்பு கொண்டவர்கள். அதனாலேயே ஏறக்குறைய 25 ஆண்டுக் காலமாக அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்றவர்களில் யானும் ஒருவனாய் இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சமய உணர்வு ஒழுக்கம் உரை என்னும் இவற்றுள் எந்த அளவேனும் உடையவர்கள் எனத் தெரிய வந்தால், திரு முதலியாரவர்கட்கு அவர்களிடம் தம்மை அறியாமலே ஓர் அன்பு தோன்றிவிடும். அவ்வகையால் என்னிடத்தும் அவர்கள் கொண்டிருந்த அன்பு என் தரத்ததன்று. அவர்தம் நூல்களுள் காசி அலகாபாத் பல்கலைக் கழகங்களில் ஆற்றிய சொற்பொழிவு நூலும், மெய்கண்டார் அருளிய **சிவஞான போதம் தமிழ் முதல்நூலே** மொழிபெயர்ப்பன்று என்பதை

நூற்றுக்கு மேற்பட்ட காரணங்களால் நிறுவிய ஆராய்ச்சி நூலும் மிகச் சிறந்தன எனலாம்.

**வித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்**

**அனுதாப அறிவிப்பு :** நம் மகா சமாஜத் தலைவர் திரு. ம. பா. அவர்கள் காலமானதை அறிந்து மிகமிக வருந்துகிறேன். நமது சமாஜமே அவர்களது வாழ்க்கைத் தொண்டின் நிலைக்களமாயிற்றே! அவர்களது மறைவு நம் மாநிலம் அனைத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டம். அவர்களின் பிரிவை முன்னிட்டு எங்கள் நாகர்கோவில் நன்னெறி மன்றச் சார்பில் 28-3-58-ல் ஸ்ரீசித்ரா இந்துமத நூல் நிலையத்தில் எனது தலைமையில் இரங்கற் கூட்டம் ஒன்று கூட்டப்பெற்று அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. எங்கள் அனுதாபத்தினைச் சமாஜ அன்பர்கள் அனைவருக்கும் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

**சி. வள்ளிநாயகம் பிள்ளை, பி.ஏ.,பி.எல்.**

**எளிதில் மறப்பரோ ? :** நான் திரு. வி. க வின் நவசக்தி பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதிவந்த காலத்தில், மயிலை கிழார் அவர்களோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களைப் பன்முறை மயிலம் குன்றக்குடி மதுரை தூத்துக்குடி முதலிய ஊர்களில் நடந்த சமாச விழாக்களிலும், தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை, சாத்தூர்த் தமிழ்ச் சங்கம், சென்னை இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்தஜன சபை முதலியவற்றின் விழாக்களிலும், சென்னையில் ஞானியார் சுவாமிகள் செய்துவந்த பிரசங்கக் கூட்டங்களிலும் கண்டு பலகால் அளவளாவி யிருக்கின்றேன். திரு. முதலியாரவர்களின் சைவ நடையையும், தமிழ்ப் பற்றையும், அடியார்க்கெளியராந் தன்மையையும், பிறரை ஊக்குவிக்கும் பண்புகளையும் அறிந்தவர்கள், அவர்தம் அரிய பண்புகளை எளிதில் மறப்பரோ?

**இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை**

**ஆன்மா சாந்தி அடைக :** திரு. மா. பா. அவர்கள் இறைவன் திருவடி நிழலை யடைந்தது மிக வருத்தத்தைத் தருகிறது. அவர்கள் சமாஜத்திற்குத் தாயும் தகப்பனுமாக இருந்து பணியாற்றினர்கள். அவர் மறைவு சைவ உலகத்

திற்கும் சமாஜத்திற்கும் பெரிய நஷ்டம். அவர்கள் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

**கா. இராமநாதன் செட்டியார்,** பி.ஏ., பி.எல்.,
கோலாலம்பூர்.

**அளவிடற்கரிய நட்டம் :** திரு.ம.பா. அவர்கள் சைவத்திற்குச் செய்த தொண்டுகளைச் சைவ உலகம் ஒருநாளும் மறக்காது. அவர்களை 14—1—57ல் பொங்கலன்று காணும் பாக்கியம் பெற்றேன் இவன். அப்பொழுது அவர்கள் காட்டிய அன்பும் பரிவும், அவர்கள் பெயருக்கேற்ப அம்மாவாகவும் அப்பாவாகவும் கொள்ளத் தகுந்த நிலையிலேயே விளங்கின. அவர்கள் மறைவு சமய உலகிற்கும், சிறப்பாகச் சமாஜத்திற்கும் அளவிடற் கரிய நட்டமாகும்.

**சிவநேயன்,** கோலாலம்பூர்

**இறை வழிபாட்டில் செறிவுடையவர் :** சிவநெறி பரப்ப வந்த சிலருள் மயிலைகிழார் ஒருவராவர். பரப்பும் முறை பல் வேறு வகைத்தாகும். இவர்தம் முறையாவது சமயப் பாடல்களைச் சிறப்பாகச் சைவத் திருமுறைகளை மூலமும் உரையுமாக எளிய விலைக்கு விற்றலேயாம். அம் முறையில் சைவ சித்தாந்த சமாசத்தைப் படருமாறு செய்வித்த வித்தகர். புதுமை நல்லாராய்ச்சியையும், பழைய நல்லொழுக்கத்தையும் கைவிடாப் பெற்றியர். விடாமுயற்சியும் பேரன்பும் வாய்ந்தவர். மாணவர் சூழல் மறவாப் பண்பினர். பாவலர் தமக்குப் பரிவும் இறைவழிபாட்டில் செறிவும் உடையவர். அவர்தம் மறைவு வருந்தத் தக்கதே. இறைவன் அடி நீழலில் அவர் இன்னுயிர் இன்புறுவதாக.

**ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்**

**சமாஜக் கப்பலின் மீகாமன் :** திரு. ம. பா. அவர்களை நினைத்தால் மகா சமாஜமும், சமாஜத்தை நினைத்தால் ம. பா. அவர்களும் நினைவுக்கு வரப்பெறுவோம். சமாஜத்துடன் அவர்கள் அவ்வளவு அத்துவிதப்பட்டிருந்தார்கள். சமாஜக் கப்பலை நடத்தும் சிறந்த மீகாமனாக இலங்கினர். யாழ்ப் பாணத்தில் நிகழ்ந்த சமாஜ விழாவுக்கு அலைகடலிற் கலத்திற் செல்லும் போது, நெஞ்சத்தலைகள் நீங்கும்படி அவர் கூறி வந்த நல்லுரைகள் இன்றும் என் நினைவிலுள்ளன.

R. **பஞ்சநாதம் பிள்ளை,** திருச்சி

**தொண்டு ஈடு இணையற்றது :** கடந்த 28 ஆண்டுகளாக நான் திரு. ம. பா. அவர்களுடன் நெருங்கிய தொடர்பும், கடிதப் போக்குவரத்துக்களும் வைத்திருந்தேன். நான் அரசாங்க அலுவலில் இருந்த மதுரை, சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம், திருப்புத்தூர் முதலிய ஊர்களுக்கு என் விருந்தினராக வந்திருந்து அவர்கள் சொல்விருந்து அளித்தார்கள். குன்றக்குடி, சிவகாசி, விருதுநகர், இராமநாதபுரம் இவைகளில் சமாஜ ஆண்டு விழாக்களையும், ஸ்ரீவில்லிபுத்தூர் கண்டனூர் இவைகளில் சித்தாந்த வகுப்புகளையும் நடத்துதற்கு ஏற்பாடு செய்ய என்னைத் தூண்டியவர் திரு. ம. பா. அவர்களே. 1935-ல் திருவண்ணாமலையில் சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும், 1936-முதல் 1942-வரை தொடர்ந்து சமாஜ உதவிச் செயலாளனாகவும், சித்தாந்தம் உதவிப் பத்திராசிரியனாகவும் தொண்டாற்ற எனக்கு வாய்ப் பளித்தவர் ம. பா. அவர்களே. 1930-முதல் 1958-வரை நடந்த சமாஜ விழாக்களில் 6 ஆண்டுகள் தவிர மற்றெல்லா ஆண்டுகளிலும் யான் கலந்துகொண்டு, தமிழகத்தின் பேரறிஞர்கள் பலருடனும் பழகி மகிழும் பெரும் பயனை யான் எய்தச் செய்தவரும் அவர்களே. வைணவக் கோட்டைகள் என்று சொல்லப்படும் ஸ்ரீவில்லிபுத்தூர் இராமநாதபுரம் இவ்விரண்டிடங்களிலும் வைணவ சமயச் சொற்பொழிவுகள் செய்து வைணவர்களைத் திகைத்து மகிழச் செய்து விட்டார்கள். மயிலை மாதவாசன் என்ற பேரைத் தமக்கென நிலைநாட்டினார்கள். சைவத்திற்கும் சமாஜத்திற்கும் அவர்கள் செய்த தொண்டு ஈடு இணையற்றது.

**ஜி. கலியாணம் பிள்ளை,** எம்.ஏ,. டிப். எக்கான்

**இனி எப்போது கிட்டும் ? :**

திரு. ம. பா. அவர்கள் சமாஜத்துடன் தொடர்புகொண்டிருந்த காலம் சமாசத்தின் பொற்காலம் என்னலாம். அவர்கள் காலத்தில் சமாசத்தின் வாயிலாக அவர்கள் தமிழ்ச் சிவநெறிக்கு ஆற்றியுள்ள அரும்பணி வேறு எக் காலத்திலும் செய்யாதது ; செய்யமுடியாதது. அவர்கள் வாழ்வு சமாசத்தின் சேவைக்கே உரிமை செய்யப் பெற்றிருந்தது. சமாசத் தொண்டன் என்ற முறையில் அவர்க

ளோடு கலந்து பழகும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். கனிந்த அன்புடையவர்களானாலும், கண்டிப்பானவர்களாக இருப்பார்கள். அவர்கள் கொண்ட கருத்தை எப்படியும் பிறர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்துவிடுவதில் வல்லவர்கள். அவர்களது அன்பு பகட்டானதல்ல. எவரையும் வாரிப் பூசிக்கொள்ளும் வழக்கம் அவர்களிடமில்லை. பசப்பான பேச்சுக்களையும் அவரிடம் கேட்க முடியாது. ஆனால் உண்மையன்பு அவர்கள் உள்ளத்தில் அடக்கமாக அமர்ந்திருக்கும். நெருங்கிப் பழகுவோர் அதனை உணர்ந்து நுகர்ந்து இன்புறுவர். பார்ப்பதற்குப் பழங்கால வைதிகம் போலத் தோன்றினாலும், பரந்த சீர்திருத்த நோக்கம் உடையவர்கள். 1934-ஆம் ஆண்டு திருவதிகையில் நிகழ்ந்த சமாஜ மாநாட்டில், சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய யான், "குடுமி வைத்துக்கொள்வது போன்றவை சிவநெறி யுணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதவை அல்ல" என்று என் தலைமையுரையிற் குறித்திருந்தேன். அப்போது அவர்கள் குடுமி வைத்திருந்ததாக எனக்கு நினைவு. ஆயினும் அவர்கள் சிறிதும் மனவேறுபாடு கொள்ளக் காணேம். 'நான் எழுதியவற்றில் நெறிக்குப் புறம்பானவை இருந்தால் நீக்கி விடலாம்' என்றேன். "எழுதினபடியே இருக்கலாமே' என்று இயல்பான முறையிலே சொன்னார்கள். உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுகிற பேச்சாக அது இல்லை. செம்மலர் நோன்றாளினைச் சேர்ந்தொழுகும் சிவநெறிச் செம்மலார் ஆகிய அவர்கள், வைணவ நுண்பொருளைப் பிறவி வைணவர்களே கண்டு தெளியாத நிலையில், வைணவ மெய்க்கலைகளையும் அருட்பாடல்களையும் ஆராய்ந்து, 'மாதவ தாசன்' எனப் பெயர் பூண்டு, அச்சிட்டும் உரைவுகுத்தும் இருக்கின்றார்கள். அவர்களது பரவலான மனப் பண்பினுக்கு இதுவும் ஒரு சிறந்த சான்று. அவர்களோடு கலந்து அளவளாவி மகிழும் வாய்ப்பு இனி எப்போது கிட்டப்போகிறது?

**சி. இராமலிங்கனார்**, எம்.ஏ.

**புகழுடல் மறையாது :**

நம் மயிலைகிழார் அவர்கள் ஒழுக்கத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர். சைவ சித்தாந்தக் கொள்

கையில் பெரிதும் பற்றுடையவராக இருந்தும் புறச்சமயங்களையும் இகழாமல் அவற்றில் உள்ள அருமை பெருமைகளை எடுத்துக்காட்டும் இயல்பு வாய்ந்தவர். தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நாலாயிரம், பெரியபுராணம் முதலிய பல நூல்களையும் அடக்கவிலையில் சைவ சித்தாந்த சமாஜத்தினர் வெளியிட்டனர் எனில், அதற்கு மூலகாரணராய் இருந்தவர் நம் மயிலைகிழாரே ஆவர் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். அவர்தம் பொன்னுடலம் மறைந்தாலும் புகழுடலம் என்றும் மறையாது நின்றொளிரும். பேரும் புகழும் பெற்ற மணலியார் குடும்பத்துக்கு அவர் மேலும் புகழைத் தேடித் தந்தனர்.

பேராசிரியர் - **புலவர். மயிலை. சிவமுத்து**

---

# திரு. ம. பா. ஜாதகக் குறிப்பு

**மா. ப. தியாகராஜ முதலியார்**, B. A.

இவர் மன்மத ஆண்டு மாசிமீ 27உ (8-3-1896) ஞாற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தோன்றினார். இவருடைய ஜன்ம நக்ஷத்திரம் பூராடம். ஆனபடியினால் அதற்குரிய பா என்ற எழுத்தில் பாலசுப்பிரமணியன் என பிள்ளைத் திருநாமம் சூட்டப்பட்டார். இவருடைய ஜாதகத்தில் குரு லக்னத்தில் உச்சம் பெற்றிருந்தது.

இராமபிரான், புத்தர், அரிச்சந்திரன் முதலிய பெரிய அவதார புருஷர்கள் கடகலக்னத்தில்தான் ஜனித்தவர்கள். மற்று இராமபிரான், அரிச்சந்திரன் இவர்களுடைய ஜாதகத்திலுள்ளபடி முதலியாரவர்களுடைய ஜாதகத்திலும் குரு, சனி, அங்காரகன் ஆகிய மூன்று கிரகங்கள் உச்சம் பெற்றுள்ளன. அவ்விரு அவதாரப் புருஷர்கள் நல்லொழுக்கத்திற்கும் தூய்மைக்கும் வாய்மைக்கும் எடுத்துக் காட்டாக இன்றும் பேசப்படுகின்றனர். அதுபோல் முதலியார் அவர்களும் வாய்மைக்கும் தூய்மைக்கும் தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

முருகனுடைய அருளுக்கும் அன்பிற்கும் இவர் பாத்திரமானதற்கு ஐந்தாமிடத் ததிபதி அங்காரகனுகவும் அவன் உச்ச நிலையில் சப்தம கேந்திரத்திலிருப்பதும் காரணமாகும். இவர் தோன்றிய சில மாதங்களுக்குள் ஏழரை யாட்டைச் சனியின் அல்லல் ஆரம்பித்திருக்கிறது. அது தன்னுடைய தகப்பனுருக்குப் பிளேக் கண்டந்தை உண்டு பண்ணியது. ஆனல் இவருடைய தாயின் மாங்கல்ய பலத்தினல் அவர் பிழைத்ததாக இவருடைய சரித்திரத்தில் காணலாம். இவருடைய அந்தியகாலத்திலும் அச்சனியனின் குற்றமே இவருடைய ஆயுளைக் கொள்ளைகொண்ட தென்னலாம். சென்ற பிப்ரவரி மாதம் 6-ம் தேதி சந்திரலக்னத்தில் சனிப்பிரவேசம் ஏற்பட்டது. மார்ச் மாதம் 14-ம்வ இவருடைய ஆயுள் முடிந்தது.

இவருடைய 30-ம் ஆண்டில் அங்காரக தசை ஆரம்பத்தில் திருமணம் நிகழ்ந்துள்ளது. அதே வருடம் இவருடைய தகப்பனர் மறைந்தார். இவருடைய தாயின் மறைவு சந்திர தசை சனிபுக்தியில் 1919-ல் நேர்ந்துள்ளது. அங்காரகன்(10) பத்தாமிடத்ததிபதியாய் உச்சத்திலிருப்பதால் அந்த தசையில் முதலியாரவர்கள் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். பொதுச் சேவையிலும், சமாஜத் தொண்டிலும் ஈடுபட்டுப் பல பெரியவர்களால் போற்றப்பட்டார்கள். அரசியலில் அவர் மனம் அன்று சென்றிருப்பின் இப்போது ஒரு மந்திரிப் பதவியைப்பெற்று மறைந்திருப்பார். சைவ சமயத்திற்கு அது ஓர் நஷ்டமாக இருந்திருக்கும். அரசியலை விட்டுச் சமயத்தைப் பாதுகாக்க அவர் முன்வந்தது சைவ மக்களின் புண்ணியம் என்றே கூறலாம். "மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர், சாலப்பெரிய ரென்றுந்தீபற தவத்தில் தலைவரென்றுந்தீபற" என்றபடி மூலையிலிருந்த சமாஜத்தைத் தென்னுட்டு முற்றத்தில் விளங்க வைத்த பெரியவர் நமது முதலியாரவர்கள். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகக் கண்டு சிவஸ்தல யாத்திரை மஞ்சரி எனும் நூலை இயற்றியுள்ளார். இவ்வளவு பேற்றிற்றிற்கும் காரணம் 9-ம் இடத்ததிபதியாம் குரு லக்னத்தில் உச்சம் பெற்றிருத்தலேயாம்.

---

# அவர் வளர்த்த குழந்தை

(பூ. ஆலாலசுந்தரன், எம்.ஏ.)

யான் 1934-ம் ஆண்டு முதல் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் செயற்குழுவில் இடம் பெற்றுள்ளேன். எனவே கடந்த 24 ஆண்டுகளாகச் சைவ சித்தாந்தச் செம்மல் திருவாளர். ம. பா. அவர்களின் அன்பினையும் ஆசியினையும் பெற்றேன். இனி அவரை என்று காண்பேன்! அவரது தித்திக்கும் மணிவார்த்தைகளை என்று கேட்பேன்! என்னிடத்தில் அவருக்கு நிறைய அன்பு உண்டு. 1943-ம் ஆண்டு, தைப்பூசத்தில் எனது அருமைத் தந்தையார் இறந்த போது, அவருக்கு எனது இல்லத்தில் நீத்தார்கடன் ஆற்றிய நாளில், திரு. வி. க. அவர்களின் தலைமையில், திரு. ம. பா. அவர்கள் "சித்தாந்தம்" என்ற பொருள்பற்றிப் பேசினார் கள். திரு. ம. பா. அவர்கள் சொற்பொழிவின் நிமித்தம் பல இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்றதுண்டு. அவரது அன்பினை யான் என்றும் மறவேன்.

"மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்  
சாலப் பெரியரென் றுந்தீபற  
தவத்தில் தலைவரென் றுந்தீபற"

என்ற திருவுந்தியாருக்கு இலக்காகத் திரு. ம. பா. அவர்கள் மூலையில் இருந்த சமாஜத்தை முற்றத்தில் விட்டார்கள். சைவ சித்தாந்தம் 36 தத்துவங்களை விளக்குவதுபோல் திரு. முதலியார் அவர்கள் 36 ஆண்டுகள் சமாஜத்தின் முன்னேற் றங் கருதிப் பல துறைகளிலும் அல்லும் பகலும் உழைத்து வந்தார்கள். பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரங்கள், திருப்புகழ், நாலாயிரப்பிரபந்தம் முதலிய நூல்களைச் சுத்தப் பதிப்பாகவும் அடக்கவிலைப் பதிப்பாகவும் வெளியிட்ட பெருமை அன்னார்க்கே உரியதாகும். அவர்கள் அந்நூல் களில் எழுதியுள்ள ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அவரது ஆராய்ச்சித் திறமையினையும் நுண்மாண் நுழைபுலத்தினையும் விளக்கப் போதிய சான்றுகளாக அமைந்துள்ளன.

அவர் தமது உடம்பினைப் பேணிய முறை தனிப்பட்ட தாகும். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்தொடங்கினர்க் கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமான தயாபரரின் வாக்கிற்கு இலக்காக அவர்கள் 274 பாடல்பெற்ற திருப்பதிகளுள் அநேகமாகப் பல திருப் பதிகளைத் தரிசித்துள்ளார்கள். அவரது இந்த யாத்திரை அனுபவத்தால் எழுந்த நூல் " தலயாத்திரை விளக்கம் " என்பதாகும். அவர் தமது வாழ்க்கையில் சில குறிக்கோள் களுடன் வாழ்ந்தார்கள். அவர் கார்த்திகைத் தீபத்தில் திருவண்ணாமலையாரையும், மார்கழித் திருவாதிரையில் தில்லை யிலுள்ள அம்பலவாணரையும் தவறாமல் ஆண்டுதோறும் தரிசித்து வந்தனர்.

36 ஆண்டுகளாக அவர் வளர்த்த குழந்தை சைவ சித்தாந்த சமாஜமாகும். இந்த ஆண்டில் அவர் சமாஜ ஆண்டு விழாத் தலைவராக இருந்ததனோடு அமையாது, தமது மைத்துனரின் மகனாகிய திரு. மணலி இராமகிஷ்ண முதலியார் பி. ஏ. அவர்களை இளைஞர் மாநாட்டுத் திறப்பாள ராக ஏற்படுத்தினார்கள். தமக்குப்பின் தமது குடும்பத்தாரும் சமாஜத்தைப் போற்றவேண்டும் என்பது அவரது அவா என்பது இதனால் பெறப்படுகின்றது. அவர் சேகரித்து வைத்துள்ள இலக்கண இலக்கிய நூல்களும் சமயசாத்திர நூல்களும் பல. இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு பொது நூல்நிலையம் ஏற்படுத்தவேண்டும். சமாஜத்திற்குச் சிறிய கட்டிடம் வேண்டாம்; பெரிய கட்டிடம்தான் வேண்டும் என்று அவர் பலமுறை சொல்லியதுண்டு. எனவே சமாஜத் தினரும் அவரது குடும்பத்தினரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய கட்டிடத்தை விலைக்கு வாங்கி அதற்குச் சைவ சித்தாந்த சமாஜ நிலையம் எனப் பெயரிட்டு, அதில் ம. பால சுப்பிரமணிய முதலியார் நூல் நிலையம் என ஒரு நூல் நிலையத் தையும் அமைப்பார்களாயின், அதுவே அவரது ஆன்மாவுக்குச் சாந்தி அளிப்பதாகும். இறைவன் திருவருள் கூட்டுவதாக. அவரது தூய ஆன்மா அம்பலவாணரின் திருவடியில் அமைதி பெறுவதாக.